இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 157 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 04 – வியாழக்கிழமை 18 ஜனவரி 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 157: Thiruvalluvar Year - 2055 - Thai 04 - Thursday 18 January 2024 - Chennai 16 Pages ₹ 5.00



# புத்தாக்கத் தொழில்; சிகரத்தில் தமிழ்நாடு!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.1.2024 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை, ஜன. 18 -**

**புத்தாக்க தொழில் நிறுவனங்களுக்கு உகந்த சூழலை உருவாக்கித் தருவதில் தமிழ்நாடு சிகரத்தில் இருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டுள்ளார்.**

புத்தாக்க தொழில்களுக்கு உகந்த சூழல் ஏற்படுத்துவதில் தமிழ்நாடு முதலிடம்.

வளர்ந்து வரும் தொழில் முனைவோருக்கு உகந்த சூழலை உருவாக்கித் தருவதில் மிகச் சிறந்து விளங்கும் மாநிலங்களின் தர வரிசைப் பட்டியலை, ஒன்றிய தொழில் நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்பு துறை வெளியிட்டுள்ளது.

தொழில் நிறுவனங்களுக்கான ஆதரவு, புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல், சந்தைப்படுத்துதலை எளிமையாக்குதல், நிதி ஆதரவு திட்டங்கள் உள்பட 25 காரணிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மிகச் சிறந்த மாநிலங்கள் தர வரிசை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த பட்டியலில் 2018 ஆம் ஆண்டு, கடைசி தர நிலையில் இருந்த தமிழ்நாடு 2022 ஆம் ஆண்டிற்கான தர வரிசையில் முதலிடத்தை அடைந்துள்ளது. TANSEED புத்தொழில் ஆதார நிதி, பட்டியலினத்தவர் தொழில் நிதியம், LaunchPad நிகழ்வுகள் ஆகிய முயற்சிகளால் தமிழ்நாடு முதலிடத்தை பிடித்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏழாயிரத்து 600 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உள்ளன இவற்றில் 2022 ஆம் ஆண்டு மட்டும் 2 ஆயிரத்து 250 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் 140க் கும் மேற்பட்ட நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முதலிடம் பிடித்ததற்கான சான்றிதழை, தமிழ்நாடு ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரி சிவராஜாவிடம், ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல், வழங்கினார்.

இந்த தர வரிசைப்பட்டியலில் குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களும் இடம்பிடித்துள்ளன.

அதன்படி புத்தாக்க நிறுவனங்களுக்கு உகந்த சூழலை உருவாக்கித் தருவதில் மிகச் சிறந்து விளங்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இடம் பெற்றுள்ளது.

இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் சிகரத்தில் தமிழ்நாடு உள்ளதாக பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு : –

**StartUp தரவரிசைப் பட்டியலில், கடந்த ஆட்சிக் காலத்தில் 2018இல் கடைசித் தரநிலையில் இருந்த தமிழ்நாடு,**

**நமது திராவிட மாடல் ஆட்சியில் 2022ஆம் ஆண்டுக்கான தர வரிசையில் முதலிடத்தை அடைந்துள்ளது!**

**TANSEED புத்தொழில் ஆதார நிதி, பட்டியலினத்தவர் / பழங்குடியினர் தொழில் நிதியம், LaunchPad நிகழ்வுகள் என ஒட்டுமொத்தமாக நமது அரசு முன்னெடுத்த மறுசீரமைப்பு முயற்சிகளாலேயே தமிழ்நாடு இன்று சிகரத்தில் அமர்ந்துள்ளது.**

**தமிழ்நாட்டில் தற்போது 7600 StartUp நிறுவனங்கள் உள்ளன. அவற்றுள் 2022ஆம் ஆண்டில் மட்டும் 2250 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதே நாம் நிகழ்த்திய பாய்ச்சலுக்குச் சான்று. இந்தச் சாதனை மாற்றத்தைச் சாத்தியமாக்க உழைத்த அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகள்! இந்த இடத்தைத் தக்கவைக்கவும் மேலும் உயரங்களைத் தொட உழைக்கவும் வேண்டுகிறேன்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலை தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

### பிரதமர் மோடி 2 நாள் பயணமாக நாளை சென்னை வருகை!

## கேலோ இந்தியா போட்டியை துவக்கி வைக்கிறார் பிரதமர்!

### பிரதமர் வருகையை ஒட்டி சென்னையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்!

புதுடெல்லி, ஜன. 18 –

கேலோ இந்தியா போட்டியை துவக்கி வைப்பதற்காக, பிரதமர் மோடி, இரண்டு நாள் பயணமாக, வரும் வெள்ளிக்கிழமை, சென்னை வருகிறார். பிரதமர் வருகையொட்டி சென்னையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய இடங்களில் வரும் 19 ஆம் தேதி முதல், 31 ஆம் தேதி வரை, கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் நடக்க உள்ளன. விளையாட்டுப் போட்டிகளில், 6,000க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள், ஆயிரத்து 600 பயிற்சியாளர்கள், 1,000 நடுவர்கள் பங்கேற்க உள்ளனர்.

கேலோ இந்தியா போட்டியை துவக்கிவைக்க வருமாறு பிரதமர் மோடிக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், டெல்லிக்கு நேரில் சென்று அழைப்பு விடுத்தார்.

இதனையடுத்து, வரும் வெள்ளிக்கிழமை, தனி விமானத்தில் சென்னை வரும் பிரதமர் மோடி, நேரு உள்விளையாட்டு அரங்கில் கேலோ விளையாட்டுப் போட்டியை தொடங்கி வைக்கிறார்.

இரவு ஆளுநர் மாளிகையில் தங்கி விட்டு, மறுநாள் டெல்லி புறப்பட்டு செல்கிறார். பிரதமரின் இரண்டு நாட்கள் சென்னை பயணத்தை ஒட்டி, சிறப்பு பாதுகாப்பு படையைச் சேர்ந்த எஸ்.பி.ஜி., ஐ.ஜி. லவ்குமார் தலைமையில், சுமார் 20 எஸ்.பி.ஜி. பாதுகாப்புபடை அதிகாரிகள், சென்னை வந்தனர்.

இதனைத் தொடர்ந்து, எஸ்.பி.ஜி., ஐ.ஜி. லவ்குமார் தலைமையில், சிறப்பு பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தமிழ்நாடு அரசு உயர் அதிகாரிகள், எஸ்.பி.ஜி. அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்பு அதிகாரிகள், மத்திய தொழில் பாதுகாப்பு படை அதிகாரிகள், சென்னை விமான நிலைய உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**மதுரை, ஜன. 18 -**

**தமிழர் திருநாளாம் தைப் பொங்கலையொட்டி, உலகப் புகழ் பெற்ற மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு தொடங்கியது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜல்லிக்கட்டை தொடங்கி வைத்தார். மேலும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டைப் போற்றுவோம், பாதுகாப்போம் என தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**







உலக பிரசித்திப் பெற்ற மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி, மு.மணிமாறன் மற்றும் தமிழரசி எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் சங்கீதா உள்பட அமைச்சர்கள், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தைத்திருநாளையொட்டி மதுரை மாவட்டத்தில் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறுவது வழக்கம். காணும் பொங்கலான நேற்று உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு தொடங்கியது.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தி.மு.க. இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜல்லிக்கட்டை தொடங்கி வைத்தார்.

முன்னதாக வாடிவாசலில் இருந்து ஒவ்வொரு காளையாக மைதானத்திற்குள் அவிழ்த்து விடப்பட்ட காளைகளை அடக்க வீரர்கள் தீரத்துடன் தழுவினர்.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!**

தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சங்க காலம் முதல் இந்தக் காலம் வரை ஏறு தழுவுதல் நம் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்வதாகத் தெரிவித்துள்ளார்.

உலகப்புகழ் பெற்ற மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டியை உறுதிமொழி வாசித்து கொடியசைத்து தொடங்கி வைத்தோம் எனக் குறிப்பிட்டுள்ள அமைச்சர், வாடிவாசலில் இருந்து துள்ளிக் கொண்டு சீறிப்பாயும் காளைகள் தீரமிகு வீரர்கள் என ஆர்ப்பரித்த அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நமக்கு உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் தந்ததாகத் தெரிவித்துள்ளார்.

அரசு வகுத்த அத்தனை விதிமுறைகளையும் முறையாக பின்பற்றி ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்தி வரும் ஏற்பாட்டாளர்கள் அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டுள்ள அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நம் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டைப் போற்றுவோம், பாதுகாப்போம் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**“ஒரே நாடு ஒரே தேர்தல்” தி.மு.க. எதிர்ப்பு!**

பக்கம்–3

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 18-01-2024

# குறளும் குதர்க்கவாதிகளும் - 1

வந்த வேலையைத் தவிர, மற்ற எல்லா வேலைகளையும் பார்க்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. அவரைச் சுற்றி வளைத்துக் கொண்டு குளிர் காய்ந்து கொண்டிருக்கிறது ஆரியக் கும்பல். அந்தக் கும்பலிடம் சிக்கி இருப்பதால் வலிய வந்து வாயைக் கொடுத்து உடம்பைப் புண்ணாக்கிக் கொள்கிறார் ஆளுநர்.

திருவள்ளுவர் தினத்தன்று வள்ளுவருக்கு காவி உடை அணிவித்து வாழ்த்துச் சொல்லி இருக்கிறார் ஆளுநர். அவர் வாழ்த்தை யார் கேட்டது? வாழ்த்துச் சொல்லாமலேயே இருந்திருக்கலாம்.

**ஆன்மிக பூமியாம் தமிழ்நாடு. இவர் வந்துதான் அகழ்வாராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார். பாரதிய சனாதன பாரம்பரியத்தின் பிரசாரமான துறவியாம் திருவள்ளுவர். எப்போது வந்தது பாரதிய என்ற பெயர்? இவர் சொல்லும் சனாதனச் சக்கையின் பொருள் என்ன? திருச்சி கல்யாணராமன் சொல்லிக் கொண்டு இருக்கிறாரே அதுதானே? திரிபுவாத உளறல்களுக்கு அளவு இல்லையா?**

**வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பாரதம் உண்டா? பாரதியம் உண்டா? சனாதனச் சழக்குகளை அகற்ற வந்தவரே வள்ளுவர் தானே?**

சில மாதங்களுக்கு முன்பும் திருக்குறளைப் பற்றி இப்படித்தான் வாய்க்கு வந்ததை பேசினார் ஆளுநர்.

“திருக்குறளை ஜி.யு.போப்பின் ஆங்கில மொழி பெயர்ப்பில் படித்தபோது அதிர்ச்சியாக இருந்தது. திருவள்ளுவர் குறிப்பிட்ட தமிழர்களின் ஆதிபகவன் என்கிற ஆன்மிக ஞானத்தை சின்னா பின்னமாக்கும் காலனித்துவ நோக்கத்துடன் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. திருக்குறளில் இருந்த ஆன்மிகத்தை முற்றிலுமாக அகற்றி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஜி.யு.போப் குறிப்பிட்ட மதத்தின் பிரச்சாரகர் மட்டுமல்ல, பிரிட்டன் நாடாளுமன்றத்தின் திட்டங்களுக்காக அனுப்பி வைக்கப்பட்டவர். அதே சமயத்தில் தமிழ் அறிஞர்களால் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளைப் படிக்கும் போது மகிழ்ச்சியுற்றேன்” - என்று பேசினார். இவருக்கு ஜி.யு.போப்பை கிறித்துவராகச் சொல்ல வேண்டும். அதைச் சொல்லி கொச்சைப்படுத்த வேண்டும். அந்த நோக்கத்துக்கு திருக்குறளை சிதைத்தார்.

ஜி.யு.போப் சிதைத்து விட்டாராம். இவர் தமிழ் அறிஞர்களின் மொழி பெயர்ப்பைப் படித்தாராம். யார் மொழிபெயர்த்ததைப் படித்தார் என்பதைச் சொல்லி இருந்தால் இரண்டுக்குமான வேறுபாடு என்ன என்பதைப் பார்க்கலாம். அதைச் சொல்லவில்லை ஆளுநர்.

உலகப் பொதுமறையாக ஆகிவிட்ட திருக்குறள் உலகின் 200க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு விட்டது. இதனைக் கபளீகரம் செய்யத் துடிக்கிறது ஆரியக் கும்பல்.

**திருக்குறளை ஞானத்தின் ஊற்று, நித்திய ஆன்மிகம், ஞானத்தின் காவியம், தர்மத்தின் கண், ஆதிபகவன், பக்தி, ரிக்வேதம், உலகத்தை படைத்தவன் ஆதிபகவன் - என்று சொல்வதன் மூலமாக சனாதனக் கூட்டுக்குள் அடைக்கப் பார்க்கிறார்கள். இவர்களுக்குள் அடக்க முடியாதவர் திருவள்ளுவர். அது மட்டுமல்ல, சனாதனத்துக்கு எதிராகவே தனது நூலை உருவாக்கினார் திருவள்ளுவர்.**

**“திருக்குறள் என்பது சமயத்திற்காகத் தோன்றிய நூலன்று. பிற்காலத்தவர்கள் வடமொழி நான்மறையோடு திருக்குறள் ஒத்தது என்பர். இல்லை, இல்லவே இல்லை” என்றவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். அத்தகைய வள்ளுவரைத் தான் பாரதிய சனாதனி என்கிறார் ஆர்.என்.ரவி.**

திருக்குறளை இலக்கியமாக மட்டுமல்லாமல், இயக்கமாகப் பரப்பி போற்றிய மாநிலம் தமிழ்நாடு. தமிழ் அமைப்புகள், குறளை நெறியாகக் கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள். திருவள்ளுவரை வழிகாட்டியாகப் போற்றினார்கள். அப்போது திராவிட இயக்கம் தான் திருவள்ளுவருக்கு அரசியல், சமூக முகம் கொடுத்தது. திருக்குறள் மாநாடுகளை நடத்தியது. திருக்குறளை மலிவு விலைப் பதிப்பாகப் போட்டு விற்பனை செய்தார் தந்தை பெரியார்.

“ஆரியரல்லாத இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறப்பாக இந்நாட்டுப் பழங்குடி மக்களான திராவிடர்கள் அனைவருக்கும் வள்ளுவர் அருளிய திருக்குறள் ஒரு பெரிய செல்வமேயாகும். நமது பெருமைக்கும், நெறிக்கும் (மதத்துக்கும்), நாகரிகத்திற்கும் வாழ்க்கை முறைக்கும் எடுத்துக் காட்டாக அதில் பல சங்கதிகளை நாம் காணலாம். திருக்குறளின் பேரால் நம் பெருமையை திராவிடரல்லாத மக்களுக்கு உணரச் செய்ய முடிகிறது. நமது சரித்திரத்திற்கும் நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காரியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியுமாயினும் அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத் தான் புரியும். அவர்களுக்குத் தான் பயன்படும். ஆனால் திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது” என்று 1948 ஆம் ஆண்டு பேசியவர் தந்தை பெரியார்.

**தெய்வீகத்தன்மையை வள்ளுவருக்கு தந்துவிடக் கூடாது, திருக்குறளை உண்டாக்கியவரின் உண்மைப் பெயர் மறைக்கப்பட்டுவிட்டது, திருக்குறள் திராவிடநூல், இதனை நன்றாக மனதில் பதிய வையுங்கள், ஆரியக் கொள்கைகளை மடியச் செய்ய எழுதப்பட்ட நூல் திருக்குறள், புத்தர் செய்த வேலையை திருக்குறள் செய்துள்ளது, திருக்குறளை நான் ஆராய்ச்சி செய்தவனல்ல; ஆனால் பெருமையை உணர்ந்துள்ளவன், என்று பேசிய பெரியார், இதனை பாடத்தில் சேர்க்க வேண்டும் என்றார்.**

திருக்குறளை மூன்றாகப் பிரித்து எளிதில் புரியும் குறளை கீழ் வகுப்புகளுக்கும், கடினமானதை நடுத்தர வகுப்புக்கும், அதன்பிறகு உள்ளதை மேல் வகுப்புக்கும் வைத்தால் பள்ளிகளால் மதப்படிப்போ, ஒழுங்குப்படிப்போ தனியாக வேண்டுவதில்லை என்றார். மாணவர்களின் பரீட்சைக்குள் திருக்குறளை உணரும்படி செய்துவிட்டால் எவ்வளவோ நன்மை என்றார். திராவிடர் கழக மாநாடுகளில் திருவள்ளுவர் படத்தை திறந்து வைத்தார்.

★ பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமை யான்.

★ இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக இவ்வுலகியற்றி யான்.

★ மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

★ குடிசெய் வார்க்கில்லை பருவம் படிசெய்து
மானங் கருதக் கெடும்.

★ தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

★ இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

★ எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

★ எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

- ஆகிய குறள்களை அதிகம் மேற்கோள் காட்டினார் பெரியார்.

- தொடரும்

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# அனைத்து மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுத்திடுவீர்!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜன.18-**

**இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்களும் அவர்களது மீன்பிடிப்படகுகளும் தொடர்ந்து சிறைபிடிக்கப்படுவது குறித்தும் கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்கக்கோரி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**



முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்களும் அவர்களது மீன்பிடிப் படகுகளும் தொடர்ந்து சிறைபிடிக்கப்படுவது குறித்து தனது ஆழ்ந்த வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்.

நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 13.01.2024 அன்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 10 மீனவர்களையும், அவர்களின் விசைப்படகையும் இலங்கைக்கடற்படையினர் 15.01.2024 அன்று சிறைபிடித்தனர் என்றும், மற்றொரு சம்பவத்தில், ராமநாதபுரம், பாம்பன் பகுதியைச் சேர்ந்த 18 மீனவர்களையும், அவர்களது இரண்டு விசைப்படகுகளையும் 16.01.2024 அன்று இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர் என்றும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

**மீனவர் சமுதாயத்திற்கு பாதுகாப்பற்ற நிலை!**

கடந்த மூன்று நாட்களில் இலங்கை கடற்படையினர் தமிழ்நாடு மீனவர்களை அடுத்தடுத்து சிறைபிடித்துள்ளனர் என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள் இத்தகைய கைது நடவடிக்கைகள் மீன்பிடி தொழிலை மட்டுமே தங்கள் வாழ்வாதாரமாக நம்பியுள்ள மீனவ சமூதாயத்தினரிடையே பாதுகாப்பற்ற சூழலை உருவாக்கியுள்ளது என்று தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரின் சிறைபிடிப்பு நடவடிக்கைகளில் எந்த தளர்வும் இருப்பதாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இத்தகைய தன்னிச்சையான கைது நடவடிக்கைகளை தடுத்திட இலங்கை அரசுக்கு வலியுறுத்திட வேண்டுமென்றும் இலங்கை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து படகுகளையும் விடுவிக்க தெளிவான காலக்கெடுவை நிர்ணயிக்க வேண்டுமென்றும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க இலங்கை அரசுடன் இந்த விவகாரத்தை வலுவாக எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

முதல்வர் எனக்கு வழங்கிய ‘மகாகவி பாரதியார்’ விருது

# எனது கவிதைத் தமிழுக்குக் கிடைத்த அங்கீகாரம்!

## முதல்வருக்கு - கவிஞர் பழனிபாரதி அன்பில் நனைந்த நன்றி அறிக்கை!

*சென்னை, ஜன.18-*

*“முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எனக்கு வழங்கிய மகாகவி பாரதியார் விருது எனது கவிதைத் தமிழுக்குக் கிடைத்த அங்கீகாரம்” என்று மகாகவி பாரதியார் விருதுபெற்ற கவிஞர் பழனிபாரதி ‘என் அன்பில் நனைந்த நன்றி’ என குறிப்பிட்டு அறிக்கை விடுத்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*



*முதல்வர் அவர்கள் எனக்கு வழங்கிய மகாகவி பாரதியார் விருது எனது கவிதைத் தமிழுக்குக் கிடைத்த அங்கீகாரம். நான் திராவிட இயக்கக் கருத்துகளால் உருவான கவிஞன் என்பதற்கான அடையாளம். புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த மறைந்த என் தந்தை கவிஞர் சாமி பழனியப்பனையும் போற்றி வழங்கிய பெருமிதம்.*

*“தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்றான் மகாகவி பாரதி.*

*“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு” என்றான் புரட்சிக்கவிஞன் பாரதிதாசன். இவற்றைச் சொல்லால் மட்டும் அல்லாமல் செயலாலும் நிரூபித்துக் கொண்டிருக்கிற அரசுதான் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அவர்களுடைய ‘திராவிட மாடல்’ அரசு.*

**சூரியனைப் போல் சுடர் விடுகிறது!**

*மக்கள் நலனே என் நலமென்று இரவு பகல் பாராமல் வெயில் மழை பாராமல் உழைக்கிற அவரது உழைப்புதான், தமிழ்ச் சமூகத்தின் எந்த அடுக்குகளும் சரிந்துவிடாமல் சமதளத்தில் சமூக நீதியைத் தாங்கி நிற்கிறது. அயலகத் தமிழர் தினம் விழாவில் அவர் ஆற்றிய சொற்பொழிவில் ஒரு வரி மகத்தானது. சூரியனைப் போலச் சுடர்விடுவது.*

*அவர் சொன்னார் “நான் எந்தச் சூழலிலும் மக்களோடு இருப்பவன்; என் சக்தியை மீறி உழைப்பவன்” என்று. அவரது அரும்பெரும் அரசியல் வரலாற்றை ஒரு வரியில் சொன்னது போல் அமைந்த வரி அது.*

*அவரது திருக்கரத்தால் நான் பெற்ற விருது என் சிறகுகளை விரிக்க, வானத்தை இன்னும் அகலமாகத் திறந்துவைத்திருக்கிறது. தமிழ்நாடு முதல்வருக்கு என் அன்பில் நனைந்த நன்றி.*

*இவ்வாறு கவிஞர் பழனிபாரதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*

மாதவரம் மண்டலத்தில்

# குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

*சென்னை, ஜன.18-*

*மாதவரம் மண்டலம், ரெட்டேரி சந்திப்பு அருகில் 200 அடி சாலையில் அமைந்துள்ள சேவை சாலையில் குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) மேற்கொள்ளப்படுவதால் 19.01.2024 அன்று காலை 09.00 மணி முதல் 20.01.2024 மாலை 06.00 மணி வரை மண்டலம்-6 (திரு.வி.க. நகர்), மண்டலம் 7 (அம்பத்தூர்), மண்டலம்8 (அண்ணா நகர்), மண்டலம்9 (தேனாம்பேட்டை) மற்றும் மண்டலம்10 (கோடம்பாக்கம்)க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.*

*எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.*

*இவ்வாறு சென்னை குடிநீர் வாரியம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*



## ஒன்றிய - மாநில உறவுகளுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்!

# “ஒரே நாடு - ஒரே தேர்தல்” திட்டத்தைக் கைவிடுக!

## தி.மு.க. எதிர்ப்புத் தெரிவித்து ஒன்றிய அரசின் உயர்நிலைக் குழுவிற்குக் கடிதம்!

**சென்னை, ஜன. 18 -**

**அரசியல் சட்டத்திற்கும் அச்சட்டம் தந்த கூட்டாட்சித் தத்துவத்திற்கும் எதிராக ஒன்றிய மாநில உறவை மட்டுமின்றி, ஒன்றியத்திற்கே பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் “ஒரே நாடு ஒரே தேர்தல்” திட்டத்தை கைவிடு! அதிகார வரம்பற்ற விசாரணை நடத்தும் உயர்நிலைக்குழு - அதிகாரப் பசி கொண்ட ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு துணை போகாமல் தனது விசாரணையை நிறுத்திக் கொள்ள வேண்டும்! என்று ‘ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு‘ திமுக எதிர்ப்பு தெரிவித்து, உயர்நிலைக் குழுவிற்கு கடிதம் எழுதியுள்ளது.**

இது குறித்து தி.மு.க. சார்பில் எழுதப்பட்டுள்ள கடிதம் வருமாறு:-

“ஒரே நாடு ஒரே தேர்தல்”தொடர்பான பொருள் மீதான கருத்துக் கேட்பு சம்பந்தமாக, திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய நிலைப்பாட்டையும், எதிர்ப்பையும் கீழ்க்கண்டவாறு பதிவு செய்கிறது.

I) முன்னுரை:

ஏற்கனவே 23.12.2022 அன்று சட்ட ஆணையம் ஒரே நேரத்தில் நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டசபைகளுக்கு தேர்தல் நடத்துவது குறித்த தி.மு.க. வின் கருத்துக்களை கோரியது. இதற்கு தி.மு.க. தன்னுடைய 12.1.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக “ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு” எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதற்குப்பிறகு நேரடிவிசாரணைக்கு எவ்வித தகவலும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அனுப்பப்படவும் இல்லை. அந்த சட்ட ஆணையத்தின் கருத்துக் கேட்பு தொடர் நடவடிக்கையும் என்னவென்று தெரியவில்லை..

இதில் கவனிக்கதக்க முக்கிய அம்சம் என்னவென்றால், 2022ல் சட்ட ஆணையம் ஒரே நேரத்தில் பாராளுமன்றம் , மற்றும் மாநில சட்டசபைகளுக்கு தேர்தல் நடத்துவது சம்பந்தமாகத்தான் ஆலோசனைகளைக் கோரியது. ஆனால், தற்பொழுது ஒன்றிய அரசு இதை விரிவுபடுத்தி நாடாளுமன்ற மற்றும் மாநில சட்ட சபைகளோடு, நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் இணைத்து ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் விதமாக ஆய்வு வரம்புகளை வெளியிட்டுள்ளது. இந்தச் செயல் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராகவும், குடியரசு தலைவர் முறையிலான ஆட்சியை நோக்கியும் செல்வதாகும்.

### உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டதே செல்லாது!

II) ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட உயர்மட்ட குழு துவக்கத்திலிருந்தே சட்டவிரோதமானதும் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட உயர் மட்ட குழுவானது, அரசியலமைப்பு பிரிவு 73 ன் கீழ் ஒன்றிய அரசுக்கு அளிக்கப்பட்ட நிர்வாக அதிகாரத்தின் மூலம் அமைக்கப்பட்டதாகும். ஒன்றிய அரசின் நிர்வாக அதிகாரம் என்பது அரசியலமைப்புச் சட்டத்திற்கு உயர்வானது அல்ல. சட்டமியற்றும் அதிகாரம் உள்ளவற்றில் மட்டும்தான் நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்க முடியும் என்று வகுத்துள்ள அரசியல் சட்டத்திற்கு விரோதமானதாகும் என்பதால் இந்த உயர் நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளதே செல்லாத ஒன்றாகும். மாநில அரசின் பட்டியலில் உள்ள நகராட்சிகள், பஞ்சாயத்துகளின் தேர்தல் நடைமுறை பற்றி விசாரிக்க ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டுள்ள இந்த உயர்நிலைக்குழுவிற்கு அதிகாரமில்லை என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டவட்டமான கருத்தாகும். அது மட்டுமின்றி இந்த உயர்நிலைக்குழு சட்டவிரோதமானது. அரசியல் சட்டத்திற்கு புறம்பானது.

### நடைமுறை சாத்தியமற்றது!

III) நாடாளுமன்றம் மற்றும் சட்ட சபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது பின்வரும் காரணங்களினால் சாத்தியமற்றது என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறது.

• ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற முறை முற்றிலுமாக நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒன்று. அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சத்திற்கு எதிரானது. அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள “சுதந்திரமான, நேர்மையான” தேர்தலுக்கு முற்றிலும் எதிரானது. அரசியல் சட்டத்திற்கு விரோதமானது.

### ஜனநாயக நடைமுறையை பலவீனப்படுத்தும்!

• ஒரே நேரத்தில் தேர்தல் என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்றங்களை முன்கூட்டியே கலைக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்பதாலும் அப்படி கலைப்பது அரசியல் சட்டவிரோதம் என்பதாலும் இந்த நடைமுறையை திமுக எதிர்க்கிறது.

• ஒன்றிய ஆளுங்கட்சியும் மெஜாரிட்டியை இழந்தால் ஆட்சி கவிழும். அது போன்ற நிகழ்வில் ஒரே நேரத்தில் தேர்தல் என்ற முன்னெடுப்பிற்கு மீண்டும் இடையூறு ஏற்படும் என்பதைக் கூட ஆலோசிக்காமல் “ஒரே நாடு ஒரே தேர்தல்” முயற்சி நடப்பது நடைமுறை சாத்தியமற்றது.

### கட்டுக்கடங்காத செலவீனத்தை ஏற்படுத்தும்!

• ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் தேர்தல் என்பது அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சத்திற்கு எதிரானது. அச்சட்டம் வகுந்து தந்துள்ள மத்திய மாநில உறவு அடங்கிய கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது. ஜனநாய நடைமுறையை பலவீனப்படுத்துவதாகும்.

• ஒரே நேரத்தில் தேர்தல் என்பது தேசியக் கட்சிகளுக்கும் மாநில கட்சிகளுக்கும் இடையே தேர்தல் களத்தில் சம நிலையிலான போட்டியை ஏற்படுத்தித் தராது.

• உள்ளாட்சித் தேர்தல், சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்த முயற்சிப்பது எழுத்தறிவு இன்னும் பெற வேண்டிய கிராமப்புற மக்கள் மத்தியில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

### ஒன்றிய -மாநில அரசுகளின் உறவுக்கு அச்சுறுத்தலாகும்!

• ஒரே நேரத்தில் தேர்தல் என்றால் அதை எதிர்கொள்ள தேர்தல் ஆணையத்திற்கு தேர்தல் ஆணையர் எண்ணிக்கை, உள்கட்டமைப்பு எல்லாம் இப்போது இருப்பது போல் 10 மடங்கு உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும். தேர்தல் அதிகாரிகளின் எண்ணிக்கை இப்போது இருப்பதை விட 3 முதல் 5 மடங்கு அதிகரிக்க வேண்டும் என்பதால் கட்டுக்கடங்காத செலவினத்தை ஏற்படுத்தும் என்பதால் இது நடைமுறை சாத்தியமற்றது.

• நகராட்சிகளும், பஞ்சாயத்துகளும் மாநில அரசின் நிர்வாக அமைப்புகள் என அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டவை. ஆகவே இவற்றுக்கும் சட்டமன்றம், நாடாளுமன்றத்துடன் தேர்தல் என்பது அரசியல் சட்ட விரோதமானது. இத்தேர்தல் முழுக்க முழுக்க மாநில அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருப்பதாகும்.

> **“2022ல் சட்ட ஆணையம் ஒரே நேரத்தில் பாராளுமன்றம் , மற்றும் மாநில சட்ட சபைகளுக்கு தேர்தல் நடத்துவது சம்பந்தமாகத்தான் ஆலோசனைகளைக் கோரியது. ஆனால், தற்பொழுது ஒன்றிய அரசு இதை விரிவுபடுத்தி பாராளுமன்ற மற்றும் மாநில சட்ட சபைகளோடு, நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் இணைத்து ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் விதமாக ஆய்வு வரம்புகளை வெளியிட்டுள்ளது. இந்தச் செயல் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராகவும், குடியரசு தலைவர் முறையிலான ஆட்சியை நோக்கியும் செல்வதாகும்.”**

• ஒரே நேரத்தில் நகராட்சி, பஞ்சாயத்து, சட்டமன்றம், நாடாளுமன்ற தேர்தலை நடத்த தேர்தல் ஆணையத்திடம் போதிய வாக்குப் பதிவு இயந்திரங்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கே பல லட்சம் கோடி ரூபாயை செலவிட வேண்டிய நிதிச் சுமை தேர்தல் ஆணையத்திற்கு ஏற்படும் என்பதால் இந்த தேர்தல் நடைமுறையால் நிதி சிக்கனம் ஏற்படாது.

• ஒரே நேரத்தில் தேர்தலைத் திணிப்பதற்கு அரசியல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது மாநில உரிமை மற்றும் அரசியல் சட்டத்தால் மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பறிப்பதாகும். இது ஒன்றிய - மாநில அரசு உறவுகளில் மட்டுமல்ல; ஒன்றியத்திற்கே கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் ஆபத்து மிக்க முயற்சி.

• ஒன்றிய மாநில அரசு உறவுகளுக்கும், ஒன்றியத்திற்குமே அச்சுறுத்தலாக இருக்கும் இது போன்ற தேர்தல் நடைமுறை பற்றிய முடிவினை உயர்நிலைக்குழு விளையாட்டாக எடுத்து அதிகாரப் பசியுடன் இருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை திருப்திப்படுத்த நினைக்க கூடாது.

• அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கும் அரசியல் சட்டத்தை நமது அரசியல்சட்டத்தை உருவாக்கியவர்கள் சிந்தித்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அரசியல் சட்டத்தை சிதைக்கவோ உருமாற்றவோ, விரைவில் மக்களால் நிராகரிக்கப்படும் நாடாளுமன்ற மெஜாரிட்டி உள்ளோரின் சுய நலத்திற்கு உயர்நிலைக் குழு துணை போகக் கூடாது.

### உயர்நிலைக்குழு தனது விசாரணையை நிறுத்திக் கொள்ள வேண்டும்!

இறுதியாக, மேற்குறிப்பிட்ட அனைத்து காரணங்களினால் நாடாளுமன்றம், சட்டமன்றம், நகராட்சிகள், பஞ்சாயத்து ஆகியவற்றிற்கு “ஒரே நாடு, ஒரே தேர்தல்” என்ற நடைமுறையை மிக கடுமையாக எதிர்க்கிறது. ஆகவே உயர்நிலைக்குழு இது தொடர்பான தனது விசாரணையை நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் இல்லையென்றால் திராவிட முன்னேற்றக் கழகம் சட்டத்தின் வழி கொண்டு பொருத்தமான நடவடிக்கையை எடுக்கும் எனத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தி.மு.க. சார்பில் எழுதப்பட்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## சட்டமன்றங்களை முன்கூட்டியே கலைக்க வேண்டிய சூழல் ஏற்படும்!

---

## தி.மு.க இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டுச் சுடர் ஓட்டம்!

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

சேலத்தில் ஜனவரி 21-ஆம் தேதி, மாநில உரிமை மீட்பு முழக்கத்தோடு நடைபெறும் தி.மு.கழக இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டின் நோக்கங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், இருசக்கர வாகன பேரணி, மாநாட்டுப் பாடல் வெளியீடு எனப் பல்வேறு நிகழ்ச்சிகளை இளைஞர் அணி மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், மாநாட்டுச் சுடர் ஓட்டத்தை இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை அண்ணா சாலை சிம்சன் சந்திப்பில் உள்ள பெரியார் சிலையில் இருந்து இன்று (18.01.2024) காலை 7.00 மணிக்குத் தொடங்கி வைக்கிறார். முன்னதாக பேரறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் சிலைகளுக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்துகிறார்.

எல்.ஐ.சி.சந்திப்பு, ஸ்பென்சர் சந்திப்பு, அண்ணா மேம்பாலம், அறிவாலயம், அன்பகம், சைதாப்பேட்டை, கிண்டி கத்திபாரா, ஆலந்தூர், மீனம்பாக்கம், தாம்பரம் வழியாகச் செல்லும் மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்டம் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் வழியாக 316 கிலோ மீட்டர் தூரத்தை கடந்து மாநாடு நடைபெறும் சேலம் மாவட்டத்தை 20.01.2024 அன்று பிற்பகல் 1.30 மணி அளவில் சென்றடைகின்றது. இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் மாநாட்டுச் சுடரை, அன்று மாலையில் கழகத் தலைவரிடம் ஒப்படைக்கிறார்.

மாநாட்டுச் சுடர் ஓட்டம் செல்லும் இடங்களில் எல்லாம் அந்தந்த மாவட்டச் செயலாளர்கள் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் மாநாட்டுச் சுடரை ஏந்திச் செல்கின்றனர்.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என். ரகு, நா.இளையராஜா, கே.இ.பிரகாஷ், ப.அப்துல்மாலிக், க.பிரபு, பி.எஸ்.சீனிவாசன், கு.பி.பிரதீப் ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் இதற்கான ஏற்பாடு களைச் சிறப்பாகச் செய்துள்ளனர்.

**தி.மு.க. இளைஞர் அணி தலைமை அலுவலகம்,**

அன்பகம், தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.

---

### சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி:

## அனைவரும் பங்கேற்பீர்! பயன் பெறுவீர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜன. 18 -**

**சென்னையில் அதிக பொருட்செலவில் தமிழ்நாடு அரசு முன்னெடுத்து நடத்தும் பன்னாட்டு புத்தகக் கண்காட்சியில் அனைவரும் பங்கேற்றுப் பயன்பெறுங்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சி தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப்பதிவு வருமாறு:

தமிழ்நாட்டில் நமது அரசு முன்னெடுக்கும் அறிவியக்கத்துக்கு அத்தாட்சியாக கடந்த ஆண்டு முதல் சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சியை நடத்தி வருகிறோம்.

இந்த ஆண்டு சுமார் 40 உலக நாடுகள், 10 இந்திய மாநிலங்களின் பங்கேற்புடன் 50 மொழிகளைச் சேர்ந்த பதிப்பாளர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் உள்ளிட் டோர் கலந்துகொள்ளும் சென்னை பன்னாட்டுப் புத்தக கண்காட்சி 2024 இன்று தொடங்கி 18ஆம் தேதி வரை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற இருக்கிறது.

தொழிற்கல்வி சார்ந்த 200 நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்படவுள்ளன. பல்வேறு கருத்தரங்குகள், விவாதங்கள் நடைபெறுகின்றன.

எழுத்தாளர்களுக்கும் வெளிநாட்டுப் பதிப்பு நிறுவனங்களுக்கும் இடையே பாலமாக 20 இலக்கிய முகவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

தமிழ்ப் படைப்பாளிகள் உலகெங்கும் சென்று சேரவும், உலக மொழிகளில் உள்ள அறிவுச் செல்வத்தைத் தமிழில் ஆக்கி அளிக்கவும் பெரும் பொருட்செலவில் நமது அரசு முன்னெடுக்கும் இந்த உலக அளவிலான அறிவுத்திருவிழாவில் அனைவரும் பங்கேற்றுப் பயன்பெறுங்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.





பாரத ரத்னா, டாக்டர் எம்.ஜி.ஆர், அவர்களின் 107வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (17.01.2024) தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் ஆர்.செல்வராஜ், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் மரு. கே.நாராயணசாமி, ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



தமிழர் திருநாள் பொங்கல் – தமிழ்ப் புத்தாண்டு, திருவள்ளுவர் நாளை முன்னிட்டு லண்டன் SOAS பல்கலைகழக வளாகத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு கழக தலைமை நிலையச் செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவருமான பூச்சி எஸ்.முருகன் மலர் மாலை அணிவித்து மரியாதை செய்தார். இந்நிகழ்வில் இந்திய தமிழர்கள் நலன்புரி சங்க தலைவர் ரவிச்சந்திரன் மற்றும் நிர்வாகிகள் கிருஷ்ணன், சதீஷ், விஜயராகவன், ஆனந்த் குமார், பல்கலைக்கழக தமிழ் இருக்கை குழுவின் நிர்வாகி சிவ சீலன், கழக அயலக அணி NRTIA லண்டன் நிர்வாகிகள் ராஜ் குமார், ராஜன், முருகன் இட்லி கடை உரிமையாளர் மனோகரன், வழக்கறிஞர் சிவ சூரியன் முருகன் ஆகியோர் பங்கேற்றனர். இந் நிகழ்வை NRTIA லண்டன் செந்தில் குமார் ஒருங்கிணைத்தார்.

### திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தெற்கு கிராமம் - அமராவதி ஆற்றில் நீரில் மூழ்கி

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

திருப்பூர், ஜன. 18 -

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தெற்கு கிராமம் - அமராவதி ஆற்றின் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

மதுரை மாவட்டம், ஆலங்குளத்தைச் சேர்ந்த பாக்கியராஜ் (வயது 39) த/பெ.ராமசாமி, சின்ன கருப்பு (வயது 31) த/பெ.இராமலிங்கம் மற்றும் சிறுவன் ஹரி (வயது 16) த/பெ.அய்யனார் ஆகிய மூவரும் சுற்றுலா சென்றுவிட்டு தங்கள் ஊருக்கு திரும்பும் வழியில், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம் தெற்கு கிராமம், மதுரை நெடுஞ்சாலை அபூர்வா ஹோட்டல் அருகே உள்ள அமராவதி ஆற்றில் புதிய ஆற்றுப் பாலம் அருகே (16.1.2024) அன்று குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவித மாக தண்ணீரில் மூழ்கி உயிரிழந் தார்கள் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### பிரதமர் மோடியை மட்டுமே முன்னிறுத்தும் ராமர் கோயில் திறப்பு விழா!

# இந்தியாவின் எதிர்காலம் இருண்டு கிடக்கிறது!

## தீக்கதிர் நாளேடு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, ஜன. 18 -

பிரதமர் மோடியை மட்டுமே முன்னிறுத்தும் ராமர் கோயில் திறப்பு விழா என்றும் இந்தியாவின் எதிர்காலமே இருண்டு கிடக்கிறது. எனவே ஜனநாயக மதச்சார்பின்மை தீபம் ஏற்றுவோம் என்று தீக்கதிர் நாளேடு 17.1.2024 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து தீக்கதிர் நாளேட்டின் தலையங்கம் வருமாறு:-



தீக்கதிர்

2024 ஜனவரி 17 புதன்கிழமை

ஜனநாயக – மதச்சார்பின்மை தீபம் ஏற்றுவோம்!

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள ராமர்கோவில் திறப்பு விழா இம்மாதம் 22ஆம்தேதி நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கோவில் கட்டுமானப் பணிகள் முடிவடைதற்கு முன்பே நாடாளுமன்றத் தேர்தலுக்காக அவசர கோலத்தில் திறப்புவிழா தேதி முடிவு செய்யப் பட்டுள்ளது.

பிரதமர் மோடியை மட்டுமே முன்னிறுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. ராமஜென்மபூமி அறக்கட்டளை என்ற பெயரில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டாலும் இதன் பின்னால் இருப்பது முழுக்க முழுக்க ஆர்எஸ்எஸ்-பாஜக பரிவாரமே ஆகும்.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள ராமர்கோவில் திறப்பு விழா இம்மாதம் 22ஆம்தேதி நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கோவில் கட்டுமானப் பணிகள் முடிவடைதற்கு முன்பே நாடாளுமன்றத் தேர்தலுக்காக அவசர கோலத்தில் திறப்புவிழா தேதி முடிவு செய்யப் பட்டுள்ளது.

பிரதமர் மோடியை மட்டுமே முன்னிறுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. ராமஜென்மபூமி அறக்கட்டளை என்ற பெயரில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டாலும் இதன் பின்னால் இருப்பது முழுக்க முழுக்க ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. பரிவாரமே ஆகும்.

பா.ஜ.க.வினர் வீடு வீடாகச் சென்று அழைப்பிதழுடன் அட்சதை கொடுப்பதோடு திறப்பு விழா அன்று அனைவரும் வீடுகளில் விளக்கேற்ற வேண்டும் என மிரட்டி வருகின்றனர். சிறு பான்மையினரும் கூட விளக்கேற்ற வேண்டும் என பா.ஜ.க.வினர் சமூக ஊடகங்கள் மூலம் தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றனர்.

மதம் என்பது ஒருவருடைய தனிப்பட்ட நம்பிக்கை சார்ந்தது. ஏராளமான மதம் சார்ந்த விழாக்கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. அதில் மக்கள் பங்கேற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அயோத்தியில் நடைபெற இருப்பது ஆன்மீகத்திற்கு எந்த வகையிலும் தொடர்பில்லாத ஒரு அரசியல் நிகழ்ச்சியாகும்.

எனவேதான் இந்தியாவிலேயே முதல் கட்சியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்த விழாவில் பங்கேற்கப் போவதில்லை என அறிவித்தது. இதைத்தொடர்ந்து காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் இத்தகைய அறிவிப்பை வெளியிட்டுள்ளன. இது பாராட்டத்தக்கது.

மதச்சார்பற்ற இந்தியாவை சிதைத்து குறுகிய இந்துத்துவா நாடாக மாற்ற முயலும் பா.ஜ.க. தன்னுடைய தேர்தல் பிரச்சார மேடையாக ராமர் கோவிலை மாற்றமுயல்கிறது. உண்மையான ராம பக்தர்கள் இதை கண்டிக்க முன்வர வேண்டும். இந்து மதத்தை சேர்ந்த மக்கள் இந்த விழா ஓர் அரசியல் விழா என்பதை உணர வேண்டும்.

நரேந்திர மோடி தலைமையிலான பத்தாண்டு கால ஆட்சி என்பது நாட்டை நாசம் செய்து விட்டது. இந்தியாவின் எதிர்காலம் இருண்டு கிடக்கிறது. இந்த ஆட்சி அகற்றப்பட்டால் தான் இந்தியா காப்பாற்றப் படும். இந்த வேளையில் அனைவரும் ஜனநாயக தீபத்தை உயர்த்திப் பிடித்திட வேண்டும். நாடு முழுவதும் மதச்சார்பின்மை எனும் விளக்கை சுடர்விட்டு எரியச் செய்ய வேண்டும். ராமர்கோவிலைக் காட்டி பா.ஜ.க. ஏமாற்று வேலையில் ஈடுபட்டாலும் மக்கள் தங்கள் வாழ்க்கை பிரச்சனைகளின் அடிப்படையிலேயே தேர்தலில் வாக்களிப்பார்கள். அதற்கான பரப்புரை தீவிரப் படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு தீக்கதிர் நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

### கழக இளைஞர் அணி மாநாட்டுச் சுடர் - தொடர் ஓட்டம் ஏந்தி வரும்

# கழக இளைஞர் அணியினருக்கு காஞ்சி வடக்கு மாவட்டத்தில் 9 இடங்களில் உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன. 18 -

சேலத்தில் நடைபெறும் கழக இளைஞர் அணி மாநாட்டையொட்டி சுடர் தொடர் ஓட்டம் ஏந்தி வரும் கழக இளைஞர் அணியினருக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் வழியெங்கும் 9 இடங்களில் உற்சாக வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாடு வருகிற 21ஆம் தேதி சேலத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மிகப் பிரமாண்ட முறையில் நடைபெற உள்ளது.

இம்மாபெரும் மாநாட்டையொட்டி சென்னையில் இருந்து சேலத்திற்கு மாநாட்டு தொடர் ஓட்டம் சென்னை அண்ணா சாலையில் உள்ள இன்று காலை 7 மணியளவில் தொடங்குகிறது.

கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநாட்டு சுடர் ஏந்தி தொடர் ஓட்டத்தை தொடங்கி வைக்கிறார். பின்னர் அண்ணாசாலை, சைதாப்பேட்டை, கிண்டி வழியாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட எல்லையான ஆலந்தூர் கத்திப்பாரா சந்திப்பை காலை 10 மணியளவில் மாநாட்டு சுடர் வந்தடைகிறது.

ஆலந்தூர் மெட்ரோ அருகில் மாவட்ட தி.மு.க. சார்பில் மாநாட்டு சுடரை



பெற்றுக் கொண்டு என்னுடைய தா.மோ.அன்பரசன் தலைமையில் மாநாட்டு சுடர் ஏந்தி தொடர் ஓட்டம் வரும் கழக இளைஞர் அணியினருக்கு பாண்டு வாத்தியம் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அங்கு இருந்து மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மாநாட்டு சுடரை பெற்றுக்கொண்டு மாவட்ட எல்லையான செங்கல்பட்டு பாலாறு பாலம் வரை சுடர் ஏந்தி வரும் கழக அணியிருடன் பங்கேற்று செல்கின்றனர்.

காலை 11.00 மணியளவில் மாநாட்டு சுடர் தொடர் ஓட்டம் பல்லாவரம் பேருந்து நிலையத்தை வந்தடைகிறது. பம்மல் வடக்கு - தெற்கு பகுதி செயலாளர்கள் த.ஜெயக்குமார் வே.கருணாநிதி தலைமையில் எழுச்சியான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

பகல் 11.30 மணியளவில் குரோம்பேட்டை பேருந்து நிலையம் வந்தடையும் மாநாட்டு சுடர் தொடர் ஓட்டத்தை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் - மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

பகல் 12.30 மணியளவில் தாம்பரம் சானடோரியம் மெப்ஸ் அருகில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோர் தலைமையில் எழுச்சியான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

பின்னர் தாம்பரம் இரயில் நிலையம் முன்பு பகல் 1.00 மணியளவில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

வண்டலூர் ரயில் நிலையம் அருகில் பகல் 2.00 மணியளவில் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் வி.எஸ்.ஆராமுதன் தலைமையிலும், கூடுவாஞ்சேரி பேருந்து நிலையம் அருகில் பிற்பகல் 3.00 மணியளவில் நகரச் செயலாளர் - நகர மன்றத் தலைவர் எம்.கே.டி. கார்த்திக் தலைமையிலும் எழுச்சியான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

அடுத்து மறைமலைநகர் பேருந்து அருகில் மாலை 4.00 மணியளவில் நகரச் செயலாளர் நகர மன்றத் தலைவர் ஜெ.சண்முகம் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப் பட உள்ளது.

செங்கல்பட்டு புறவழிச் சாலை சந்திப்பில் மாலை 5.00 மணியளவில் மாநாட்டு சுடர் தொடர் ஓட்டம் ஏந்தி வரும் கழக இளைஞர் அணியினருக்கு செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர் வரலட்சுமி மதுசூதனன் தலைமையில் செங்கல்பட்டு நகரம் மற்றும் காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றிய கழகத்தினரும் இளைஞர் அணியினரும் உற்சாகமாக திரண்டு மகிழ்ச்சியுடன் வரவேற்பு அளித்து, அவர்களை வழியனுப்பி வைக்கின்றனர்.

மாவட்ட எல்லையான ஆலந்தூர் கத்திப்பாரா மெட்ரோ முதல் செங்கல்பட்டு புறவழிச்சாலை வரை 9 இடங்களில் கழகத்தினரும் வெண் சீருடை அணிந்த இளைஞர் அணியினரும் மகிழ்ச்சியாக திரண்டு நின்று மாநாட்டு சுடர் ஏந்தி தொடர் ஓட்டம் கழக இளைஞர் அணியினருக்கு ஊக்கம் அளித்திடும்வகையில்வழியெங்கும் உணவு, குளிர்பானங்கள், இளநீர், காபி, டீ போன்றவற்றை வழங்கி உற்சாகப்படுத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### நாகாலாந்து அமைதி ஒப்பந்த

# வாக்குறுதிகளை நிறைவேற்றாத பிரதமர் மோடி!

## நடை பயணத்தின்போது ராகுல்காந்தி குற்றச்சாட்டு!

கோயிக்மா, ஜன.18-

நாகாலாந்து அமைதி ஒப்பந்தம் தொடர்பாக, 9 ஆண்டுகளுக்கு முன் பிரதமர் நரேந்திர மோடி அளித்த வாக்குறுதிகளை இன்று வரை நிறைவேற்றாதது கண்டனத்திற்குரியது என ராகுல்காந்தி விமர்சித்துள்ளார்.

காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல்காந்தி, நாகாலாந்து மாநிலம் மோகோக்சங்கில் நேற்று தனது 4வது நாள் இந்திய நீதி பயணத்தை தொடங்கி மேற்கொண்டு வருகிறார். வழிநெடுகிலும் ராகுல் காந்தியை ஏராளமான பொது மக்கள், காங்கிரஸ் தொண்டர்கள் உற்சாகமாக வரவேற்றனர். அப்போது சாலையோரம் காத்திருந்த மக்களை சந்தித்த ராகுல் காந்தி, அவர்களிடம் குறைகளை கேட்டறிந்தார். பின்னர், இரு சக்கர வாகன ஓட்டுனர்களிடம் கலந்துரையாடினார். இதனையடுத்து, பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ராகுல்காந்தி, மற்ற பகுதிகளை போன்று, வடகிழக்கு மாநிலங்களும் முக்கியமானதாகும் என கூறினார். மக்கள் தொகை குறைவாக இருந்தாலும், முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் சமரசம் செய்து கொள்ள கூடாது எனவும் அவர் தெரிவித்தார். நாகாலாந்து அமைதி ஒப்பந்தம் தொடர்பாக, மக்களுக்கு ஒன்பது ஆண்டுகளுக்கு முன் பிரதமர் நரேந்திர மோடி அளித்த வாக்குறுதிகளை இன்று வரை நிறைவேற்றவில்லை என்று ராகுல் காந்தி குற்றஞ்சாட்டினார்.



புழல் 24 வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு மாவட்ட கழக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் பொங்கல் மற்றும் புத்தாடைகள் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு செயலாளர் கே பி சுந்தரேசன் தலைமையில் அவைத் தலைவர் சி.ஜெ.ரவி வரவேற்பில் வட்ட நிர்வாகிகள் பி.கென்னடி எம்.அந்தோணி, மலர்கொடி, செல்வராஜ், ஏ.ஜெயகர், பி.எஸ்.என்.எல்.நாகராஜ், கே.பி.பி.அறிவழகன், எம்.கவுதமன், எம்.உதயப்பாரி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். நிகழ்ச்சியில் பகுதி கழகச் செயலாளர் ஜி. துக்காராம், மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்கள். கழக முன்னோடிகள், அணிகளின் அமைப்பாளர்கள், பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் நகர முன்னாள் செயலாளர்

# சன்பிராண்டு கே.ஆறுமுகம் மனைவி திருமதி ஆ.கிருஷ்ணவேனி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!


காஞ்சிபுரம், ஜன. 18 -



முன்னாள் நகர மன்ற தலைவர், முன்னாள் நகர கழக செயலாளர் மற்றும் காஞ்சி தெற்கு மாவட்ட பொருளாளர் சன்பிராண்டு கே.ஆறுமுகத்தின் துணைவியார் திருமதி. ஆ.கிருஷ்ணவேனி அவர்கள் 15.01.2024 - திங்கள்கிழமை அன்று மாலை இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், தோழர் கள் திரளாகச் சென்று மறைந்த திருமதி ஆ.கிருஷ்ணவேனி அவர்களின் உடல் மீது மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் 16.01.2024 அன்று மாலை அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு தாயார் குளம் இடுகாட்டில் தகனம் செய்யப்பட்டது.





சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123வது வட்ட கழகத்தின் சார்பில், தமிழர்களின் திருநாள், சமத்துவ பொங்கல் விழாவை வட்டக் கழகச் செயலாளர் மு. இ. ஏழுமலை தலைமையில், மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் மதி எம்.சி, மற்றும் மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி முன்னிலையில், மாவட்ட செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர், மயிலை த. வேலு எம்.எல்.ஏ., தொடங்கி வைத்து, பொங்கல் விழா பரிசு பொருட்களை, 123 வது வட்டத்திற்கு உட்பட்ட, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், BLA2, BLC நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உறுப்பினர்கள், , மற்றும் பொதுமக்களுக்கு வழங்கினார்.

குறள் நெறி நம் வழி – குறள் வழியே நம் நெறி!

# திருவள்ளுவரை யாரும் கறைபடுத்த முடியாது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜன. 18 –**

**குறள் நெறி நம் வழி என்றும் குறள் வழியே நம் நெறி என்றும் குறிப்பிட்டு, தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் வள்ளுவரை யாரும் கறைபடுத்த முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.**



அய்யன் திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :–

தமிழினத்தில் பிறந்து அமிழ் தமிழில் அறம் உரைத்து உலகம் முழுமைக்குமான நெறிகள் சொன்ன வான்புகழ் வள்ளுவர் நாள் வாழ்த்துகள்!

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமூகநீதிக் கோட்பாட்டையும் முயற்சி மட்டுமே வெற்றியைத் தரும் என்ற தன்னம்பிக்கை ஊக்கத்தையும் அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை என்ற கருத்தியலையும் வழிகாட்டியவர் வள்ளுவர்.

133 அடியில் சிலையும் தலைநகரில் கோட்டமும் அமைத்துப் போற்றும் குறளோவியத் தமிழ்நாட்டில் வள்ளுவரை யாரும் கறைப்படுத்த முடியாது.

குறள் நெறி நம் வழி!

குறள் வழியே நம் நெறி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சபரீசனின் பெரியப்பா தியாகராஜன் அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானதையொட்டி 16.01.2024 அன்று சென்னை, கொட்டிவாக்கத்திலுள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் ஆகியோர் உள்ளனர்.



"தனது ஒரு ஏக்கர் 52 சென்ட் நிலத்தை அரசுப் பள்ளிக்கு வழங்கிய ஆயி அம்மாளின் கொடையுள்ளத்தைப் போற்றிப் பெருமைப் படுத்துவோம்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பெருமைப் படுத்தியதைத் தொடர்ந்து மதுரையில் உள்ள அவரது இல்லத்திற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்து பாராட்டினார். உடன் அமைச்சர் பி.மூர்த்தி உள்ளிட்ட முன்னணியினர் உள்ளனர்.

நீலகிரி மாவட்டம் சேரங்காடு கிராமத்தில் மின்சாரம் தாக்கி

# உயிரிழந்த 2 பேர் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜன. 18 –

நீலகிரி மாவட்டம் சேரங்கோடு கிராமம் – அரசு பேருந்து மின் கம்பத்தில் மோதிய விபத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்த அவரது அறிவிப்பு வருமாறு:

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், சேரங்கோடு1 கிராமம், மழவன் சேரம்பாடி என்ற இடத்தில் கடந்த 15.01.2024 அன்று மாலை கூடலூர்அய்யன்கொல்லி வழிதடத்தில் 20 பயணிகளுடன் பயணம் செய்த TN43N0779 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து மழவன் சேரம்பாடி பேருந்து நிறுத்தத்தின் அருகில் உள்ள மின்கம்பத்தில் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில், மின்கம்பி அறுந்து விழுந்ததில்,

மேற்படி பேருந்து ஓட்டுநர் நாகராஜ் (வயது 49) த/பெ.சதாசிவம் மற்றும் பேருந்தில் பயணம் செய்த சேரங்கோடு 1 கிராமம், பூஞ்சக் கொல்லி பகுதியைச் சேர்ந்த பாலாஜி (வயது 51) த/பெ.பாலச்சந்திரன் ஆகிய இருவரும் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள் என்ற துயரகரமான செய்தியை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

நாகராஜ் மற்றும் பாலாஜி ஆகிய இருவரையும் இழந்து வாடும் அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களின் புத்தாக்கத் தொழில் தரவரிசை!

# சிறந்த செயல்திறன் பட்டியலில் தமிழ்நாடு!

## 'தி இந்து' நாளேட்டில் செய்தி!

**சென்னை, ஜன. 18 –**

**மாநிலங்களின் ஸ்டார்ட்அப் தரவரிசை 2022 இல் தமிழ்நாடு 'சிறந்த செயல்திறன்' பிரிவில் உள்ளது என்று தி இந்து ஆங்கில நாளேட்டில் செய்தி வெளியாகி உள்ளது.**

அதன் விபரம் வருமாறு:–

புதுடெல்லியில் நடந்த நிகழ்ச்சியில் தரவரிசை வெளியிடப்பட்டது. இந்தப் பிரிவின் கீழ் தரவரிசைப்படுத்தப்பட்ட ஐந்து மாநிலங்களில் தமிழ்நாடும் இருந்தது. பிப்ரவரி 2018 இல் தொடங்கப்பட்ட இந்த தரவரிசை, மாநிலக் கொள்கை தலையீட்டின் பார்வையில் இந்திய ஸ்டார்ட்அப் நிலப்பரப்பை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நடைமுறைகளை அடையாளம் காட்டுகிறது.

செவ்வாயன்று புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான ஸ்டார்ட்அப் தரவரிசையில் 'சிறந்த செயல்திறன்' பிரிவில் இடம் பெற்றுள்ள ஐந்து மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று.

குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியவை இந்த சிறந்த பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மற்ற மாநிலங்கள். சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மாதிரி ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் மற்றவர்களுக்கு ஒரு அளவுகோலை அமைக்கின்றன. முதல் இரண்டு பதிப்புகளில், 'வளர்ந்து வரும் சுற்றுச்சூழல் அமைப்பு' என்ற பிரிவில் தமிழ்நாடு மிகக் குறைந்த பிரிவில் இடம் பெற்றது. இது 2021 ஆம் ஆண்டு தரவரிசையில் 'தலைவராக' அங்கீகரிக்கப்பட்டது, இது மூன்றாம் பதிப்பின் போது இருந்தது.

தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் இன்னோவேஷன் மிஷன் (ஸ்டார்ட்அப்–டிஎன்) படி, "ஏழு சீர்திருத்தப் பகுதிகளில் மூன்றில் தமிழ்நாடு அதிகபட்சமாக 100வது சதவிகித மதிப்பெண்களைப் பெற்றது: நிறுவன ஆதரவு, நிதி ஆதரவு மற்றும் செயல்படுத்துபவர்களின் திறன் மேம்பாடு. சீர்திருத்தப் பகுதியில் 100வது சதவீதத்தைப் பெறுவது என்பது மற்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை விட தமிழ்நாடு மாநிலம் அதிக மதிப்பெண் பெற்றுள்ளது என்பதைக் குறிக்கிறது.



Tamil Nadu placed under 'Best Performer' category in States' Startup Ranking 2022

இன்குபேஷன் மற்றும் மென்டர்ஷிப் ஆதரவில் தமிழ்நாடு 94வது சதவீதத்தையும், புதுமை மற்றும்தொழில்முனைவோரை வளர்ப்பதில் 79வது இடத்தையும், நிலையான எதிர்காலத்திற்கான வரைபடத்தில் 75வது இடத்தையும் பெற்றுள்ளது. ஸ்டார்ட் அப் இன் முயற்சிகளான டான்சீட் நிதியை நிறுவுதல், தமிழ்நாடு ஆதிதிராவிட பழங்குடியினரின் ஸ்டார்ட்அப் ஃபண்ட் மற்றும் ஸ்டார்ட் அப்களை ஆதரிக்கும் புதுமை வவுச்சர் திட்டம் ஆகியவை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளன. பெண்களால் நடத்தப்படும் ஸ்டார்ட் அப்களுக்கான சிறப்பு விதை மானியங்களுக்காகவும், கிராமப்புற மற்றும் பசுமை தொழில்நுட்பத் துறைகளில் கவனம் செலுத்துவதற்காகவும் மாநிலம் அங்கீகரிக்கப்பட்டது.

மாநிலங்களின் ஸ்டார்ட்அப் தரவரிசை கட்டமைப்பு (SRF) என்பது தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறையால் உருவாக்கப்பட்ட மற்றும் வெளியிடப்பட்ட ஒரு குறிப்பிட்ட கால திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகும், இது இந்தியாவின் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை ஸ்டார்ட்அப் வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கான அவர்களின் முயற்சிகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்கிறது. . நாட்டில் ஒரு வலுவான ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான பார்வையை அடைய பிப்ரவரி 2018 இல் மாநிலங்களின் ஸ்டார்ட்அப் தரவரிசை தொடங்கப்பட்டது. இது அரசின் கொள்கை தலையீட்டின் மூலம் இந்திய ஸ்டார்ட்அப் நிலப்பரப்பை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, மேலும் சுற்றுச்சூழல் அமைப்பின் வளர்ச்சி மற்றும் வளர்ச்சியை துரிதப்படுத்தும் நடைமுறைகளை அடையாளம் காட்டுகிறது. தமிழகத்தைச் சேர்ந்த இரண்டு ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் விருதுகளைப் பெற்றுள்ளன. கோயம்புத்தூரைச் சேர்ந்த கிரீன்விரோ குளோபல் பிரைவேட் லிமிடெட், 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய ஸ்டார்ட்அப் விருதுகளை 'நிலைத்தன்மை சாம்பியன்' பிரிவின் கீழ் பெற்றது. இந்த நிறுவனம் வேளாண் கழிவுகளை 'பசுமை கரி ப்ரிக்வெட்டுகளாக' மாற்ற புதுமையான மதிப்பு செயலாக்க நுட்பத்தைக் கொண்டுள்ளது. மரங்களை வெட்டுவதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மர கரிக்கு மாற்றாக இது பயன்படுத்தப்படுகிறது.

இதுபற்றி அதன் நிறுவனரும் நிர்வாக இயக்குனருமான முருகானந்தம் வி.என், கூறியதாவது: "நாங்கள் 2019 இல் தொடங்கினோம். தற்போது, எங்கள் நெட்வொர்க்கில் கோயம்புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து 1,000 விவசாயிகள் உள்ளனர். நாங்கள் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, துருக்கி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். இந்த ஆண்டு, நாங்கள் பல நாடுகளுக்கு செல்ல விரும்புகிறோம். திருப்பூர், ஈரோடு மற்றும் அருகிலுள்ள இடங்களிலும் புதிய வசதியை ஏற்படுத்த உள்ளோம். இரண்டாவது ஸ்டார்ட்அப், அட்சுயா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், இந்த ஆண்டின் ஜெனிசிஸ் இன்னோவேட்டர்ஸ் விருதைப் பெற்றது.


மாநிலங்களின் ஸ்டார்ட்அப் தரவரிசைப் பயிற்சியின் நான்காவது பதிப்பில், பங்கேற்கும் 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் 356 மாவட்டங்களில் 9,000க்கும் மேற்பட்ட பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட் அப்களுக்கு ஆதரவை வழங்குவதாகக் கூறின. 22 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப்களுக்கான வரையறை மற்றும் சிறப்பு சலுகைகளை உள்ளடக்கிய கொள்கை ஆவணத்தை அறிவித்துள்ளன.

மொத்தம் எட்டு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் குறிப்பாக பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகைகளின் தெளிவான வரையறையுடன் ஒரு கொள்கையை உருவாக்கியுள்ளன.

தொழில்துறை செயலர் வி.அருண் ராய் கூறியதாவது: சென்னைக்கு வெளியே ஸ்டார்ட் அப்களில் கவனம் செலுத்தியது தமிழகத்திற்கு உதவியது. நாங்கள் மண்டல வளர்ச்சியை விரும்பினோம், எனவே ஈரோடு, மதுரை போன்ற இடங்களில் மையங்களைத் தொடங்கினோம். சமூக உள்ளடக்கம் எங்களுக்கு உதவிய மற்றொரு அம்சமாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நிதி உள்ள வேறு எந்த மாநிலமும் இல்லை. இது எங்களை தனித்து நிற்க வைத்தது..."

மாநிலத்தில் 7,000 க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட ஸ்டார்ட் அப்கள் உள்ளன, அவற்றில் 2,250 க்கும் மேற்பட்டவை SRF 2022 இன் கீழ் பரிசீலிக்கப்பட்ட காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு 'தி இந்து'வில் செய்தி வெளியாகியுள்ளது.



சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்குப் பகுதி , 99வது வட்டக் கழகம் சார்பில் தை –1 தமிழ்ப்புத்தாண்டு – பொங்கல் விழாவை யொட்டி 500 பேருக்கு அறுசுவை உணவை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். வட்டச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் தலைமை வகித்தார். இவ்விழாவில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ., கே.எஸ்.ரவிச்சந்திரன், சொ.வெலு, கோ.மணி, புனிதவதி எத்திராசன், பரிதி இளம் சுருதி, ஜி.தாமோதரன், பி.சி.சம்பத்குமார், டி.செபாஸ்டின், வி.ரவி, ஏ.அஜித், சரவணன், இ.எம்.ராஜன், எம்.ராஜ், ஜெ.பானு, பி.புஷ்பலதா, கே.ஆர்.முரளி, பி.வரதராஜன், ரா.முரளி, எம்.கோமளா, ஆர்.எஸ்.வெங்கடேசன், ஏ.சுகுமார், என்.சீனிவாசன், பி.சிவா, ஆர்.மாது, எஸ்.மோகன், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஞாலம் உற்று நோக்கும் சேலம் மாநாடு! அமைச்சர்

# உதயநிதி அழைக்கிறார்! உணர்வுடன் புறப்படுவோம்!



திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் முதலே, பொதுக்கூட்டங்கள், கருத்தரங் கங்கள், நாடகங்கள், எனது தனது கொள்கை முழக்கத்தை தொய்வின்றி செய்து வருகிறது.

ஊடக வலைத்தள வசதிகள் ஏதுமற்ற அந்நாளில் அண்ணா, கலைஞர், நாவலர், ஈ. வே. கி. சம்பத், பேராசிரியர், ஆசைத் தம்பி, மதியழகன், கண்ணதா சன் ( ஆரம்பத்தில் ) சத்திய வாணி முத்து என கழக முன்னணித் தலைவர்கள் தங் களது பத்திரிக்கை வாயிலாக கழகக் கொள்கைகளை பட்டி தொட்டியெங்கும் பரப்பி வந்தனர்.

கிளைக்கழகம், சிற்றூர், பேரூர், நகரம், பட்டிணக்கரை யென சிறு அமைப்புகள், மன்றங்கள் மூலம் கழக சொற் பொழிவாளர்களைக் கொண்டு, சிறுமேடையமைத்து, கழ கத்தை வளர்க்கவும், ஆழ வேர்பதியவும், அல்லும் பகலும் பாடுபட்டனர்.

இவற்றிற்கெல்லாம் மணிமுடியாய் அமைந்தது கழகத் தின் மாநில மற்றும் மாவட்ட மாநாடுகள் தான்.

ஆரம்ப நாட்களில் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா, அவர்களின் அடியொற்றித் தொடர்ந்து, தலைவர் கலைஞர் அவர்கள் கூட்டிய மாநாடுகளில், கழகத்தின் கொள்கைத் தங் கங்கள் தங்களது குடும்பத்தினருடன் நான்கு, ஐந்து நாட்கள் கலந்து கொண்ட வரலாறு திமுகவிற்கு மட்டுமே இன்றளவும் சொந்தம்.

கழகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து பலப்பல மாநாடு கள் நடந்தேறியுள்ளது. திமுக தேர்தலில் பங்கு பெற்று மக் களை சந்திக்கும் முன்னும், பின்னும் நடத்தப்பட்ட மாநாடு கள் தான் கழகத் தலைமைக்கும், கடைநிலைத் தொண்ட னுக்கும் நெருக்கத்தை, பற்றை, பாசப்பிணைப்பை ஏற்படுத் தியது.

தமிழ்நாட்டில் அதிரடி மாற்றங்களும், ஆட்சி மாற்றங்க ளும் ஏற்படக் காரணமாக அமைந்தது.

அந்த அடிப்படையில் தான் தி.மு.கழகத்தை இந்திய ஒன் றியமே எதிர்நோக்கும் பரபரப்பான அரசியல் சூழலில் கழ கத்தின் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி அவர்கள் அழைக்கிறார்! மாங்கனிநகராம் சேலத்தில் ஜனவரி 21 அன்று நடைபெறும் 2 வதுமாநில இளைஞரணி மாநாட் டிற்கு!!

2007 தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக வீற்றி ருந்த காலத்தில் நெல்லையில் அன்றைய இளைஞரணிச் செயலாளர் தளபதியவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இன்று இதோ வாழையடி வாழையாய், வாய்மையுறு தமிழ்நிலம் காக்க வதைகள் ஏற்று, வாதைகளைப் பொறுத் துக் கொண்ட, உயிரனையத் தலைவர் கலைஞர், ஓங்குபு கழ் தளபதியவர்களின் வரிசையில் தன்னை ஒப்படைத்துக் கொண்ட இளைஞர்களின் இதயநிதி அழைக்கிறார்! சேலம் மாநகருக்கு.

ஆம். கழகத்தின் ஒவ்வொரு முக்கிய நிகழ்வுகளில் முதன்மை பெற்ற சேலம் மாநகரில் சிறப்புற நடைபெறவுள்ள மாநாட்டிற்கு அழைக்கிறார்.

1945 ல் திராவிடர் கழக பெயர் மாற்ற தீர்மானம் கொண்டு வந்து, அது அண்ணாதுரை தீர்மானம் என அறிவிக்கப்பட்ட திராவிடர் கழக மாநாடு நடைபெற்ற ஞாலம் போற்றும் சேலத் திற்கு அழைக்கிறார்! சிந்தைக்கு விருந்து பெற சிரத்தையுடன் புறப்படுவோம்.

1956 டிசம்பர் 29 ல் சேலத்தில் கூடிய கழகப் பொதுக்குழு 1957 பொதுத்தேர்தலில் கழகத்தின் சார்பில் 150 இடங்களில் கழகம் போட்டியிடுவதாகவும், வேட்பாளர்களை தேர்வு செய்ய கலைஞர் மு. கருணாநிதி, நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஈ. வே. கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கே. ஏ. மதியழகன், உள்ளிட்டோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்தல் அறிக்கையை கலைஞர் மு. கருணாநிதி, ஈ. வே. கி. சம்பத் இருவர் தேர்வு செய்யவும் பொதுக்குழு தீர்மா னித் தது.

அந்த மாநாட்டில் தேர்தல் நிதி வேண்டி, கழகத்தோழர் களை, முன்னணியினரை, ஆதரவாளர்களை, கழக அனு தாபிகளை, கலைத்துறையினர் உள்ளிட்ட பலரின் ஆதரவு வேண்டும் எனப் பேசிய அண்ணா, அன்று பளிச்சென்று மின்னிய நட்சத்திரமான தலைவர் கலைஞரை, “ சற்று வித் தியாசமான நட்சத்திரம் தம்பி கருணாநிதி” அவர் இளம் வய திலேயே திராவிட இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண் டவர். எழுத்து, பேச்சு, உழைப்பு என மூன்றையும் கொண்டு இயக்கப் பணியில் தன்னை ஈடுபடுத்தி நம் கழக வளர்ச்சிக் காக அரும்பாடு படுபவர் எனப் பாராட்டி, அவரது பராசக்தி புதிய மாற்றத்தை ஏற்படுத்தி, கணேசன் என்னும் கலைஞ னையும், எம். ஜி. ராம்சந்தரை மந்திரி குமாரி மூலமும் இயக் கத்தின் பால் ஈர்த்தவர் எனப் போற்றி பூரிப்பு கொண்டார்.

அத்தகு சிறப்பு மிகுந்த சேலம் செம்மாங்கனி நகருக்கு தான் நமது உதயநிதி அழைக்கிறார்.

சேலம் மார்டன் தியேட்டர்சில் ஜூபிடர் பிக்சர்ஸுக்காக அந் நாளைய உச்ச நட்சத்திரங்களைக் காட்டிலும் அதிகச் சம்ப ளத்தை தனது கனல் பறக்கும் வசனங்களுக்காகப் பெற்று, எம். ஜி. ஆர். சிவாஜிகணேசன் எனும் இரண்டு திரை ஆளு மைகளை தனது ஆற்றல் மிக்க வசனவீச்சால், தமிழ்நாட் டிற்குத் தந்த தலைவர் கலைஞரின் மூச்சு காற்றும், பேச்சுக் காற்றும் நிறைந்திட்ட எஃகு நகர் சேலத்திற்கு இரும்பு நிகர் நெஞ்சுரம் கொண்ட இளைஞர்களை அழைக்கிறார்.

உறவுக்கு கை கொடுப்போம். உரிமைக்கு குரல் கொடுப் போமென தான் வகுத்துக் கொண்ட அரசியல் நியதிக்காகவும், வீடு இருந்தால் தான் ஓடு மாற்ற முடியும் என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் தேசப் பற்றினை மெய்ப்பிக்கும் வகையில் 70 களில் யுத்த நிதியாக இந்தியாவில் யாருமே அவ்வளவு நிதி தரவில்லை என்று சொல்லுமளவிற்கு அன்றைய பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்களை அழைத்து வந்து ஆறுகோடி ரூபாய் பெரும் நிதியை ஆறு தங்க மாங்கனிகளோடு தட்டில் வைத்து தந்த சேலம் பூமிக்கு நமது சிந்தை நிறைந்த இளைஞரணிச் செயலாளர் அழைக் கிறார்!

சேலம் உருக்காலை கொண்டு வந்து, எண்ணற்ற இளை ஞர்களின் இல்லத்தில் ஒளிதந்த ஓய்வறியா உதயசூரியன் தலைவர் கலைஞரின் வழித்தோன்றல் அழைக்கிறார்.

ஈரோடு குருகுலத்தில் அரசியல் பயின்று, ஆசானாய்த் திகழ்ந்த தந்தை பெரியார் அவர்களை கருத்து வேறுபாடுகள் நிமித்தம் எதிர்த்து நின்று, பின்னர் பேரறிஞர் அண்ணாவின் ஆட்சி அமைந்து, அய்யாவின் கொள்கைகள் சட்டமாக்கப் பட்டு, அண்ணாவைத் தொடர்ந்து, ஆட்சியே பெரியாருக்கு சமர்ப்பணம் என்ற அண்ணாவின் வழியில் ஐயாவைப் போற்றிய தலைவர் கலைஞர் அவர்களுக்கு வெள்ளி சிம்மா சனம் தந்து,தந்தை பெரியார், “ நீங்க தான் உட்காரனும். உட்காருங்கோ! “ என உரிமையோடு தனது மகனனைய மாணவர் கலைஞர் அவர்களை அமரச் சொல்லி, “ இல்லை ஐயா, நீங்க தான் உட்காரனும் “ எனத் தலைவர் கலைஞர் அவர்கள் வற்புறுத்தி, இறுதியில் இருவருமே அமர்ந்த உணர்வு மிக்க விழா நடைபெற்ற சிறப்புகளை தன்னகத்தே கொண்ட தென்னகத்து இரும்பு நகராம் திராவிட கோட்டை தீந்தமிழ் சேலம் நோக்கிப் புறப்பட அன்புடன் அழைக்கிறார் அமைச்சர் உதயநிதி.



வழக்கறிஞர்
**வெ. அன்புவாணன்**
கொள்கை பரப்பு
துணைச் செயலாளர்.

கழகத்தின் அறிவுப் பெட்டகமாம் தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சி மாமேதை மாறன் அவர்கள் தனது கல்லூரிப் பருவத்தில் உலவிய, திராவிட, பகுத்தறிவு பெருங் கொள்கைகளின் அடித்தளமாய் திகழும் சேலம் மூதூருக்கு வேழம் நிகர் அறிவாற்றல் மிக்க கழக முன்னணியினர் உரை கேட்க அழைக்கிறார். நமது இதயங்களில் நிறைந்த உதயநிதி.

நிறைவாக இராமாயணம் என்பது ஆரிய திராவிட யுத்தம் என்ற பண்டித நேருவின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் இன்றைய இந்திய ஒன்றிய அரசு இறையாண்மையை காற் றில் பறக்க விட்டு, இந்தியா என்பது மதச்சார்பற்ற நாடு என அரசியலமைப்புச் சட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்டதையும் மறந்து, சனாதன சங்கிகளின் மடமாய் மாறிப்போனதை தகர்க்க, இந்திய ஜனநாயகத்திற்கு, மதச்சார்பின்மைக்கு ஆபத்து வரும் போதெல்லாம் காஷ்மீர் தொடங்கி, கன்னியா குமரி வரை முதலில் ஒலிக்கும் குரல், கழகத்தின் குரல், அது தலைவர் கலைஞரின் கம்பீரக் குரல் என்பதை வரலாற்றின் நெடிய பக்கங்கள் பதிவுசெய்துள்ளதைப் போல், இன்று தென் னகம் மட்டுமின்றி, இந்திய தேசமே எதிர்பார்க்கும் இரும்பு மனிதர் நமது தலைவர் தளபதியவர்களின் நாடாளுமன்ற தேர்தல் வியூகங்கள் வெளிப்படவுள்ள சேலத்தில் கூடிடு வோம்!

அவர் சிந்தை உதிக்கும் திட்டங்கள்
நிறைவேற சூளுரைப்போம்.

தமிழின விடியலுக்காய் விரல்தேய எழுதிய தலைவர் கலைஞரின் பேரப்பிள்ளை அழைக்கிறார்
பேரணியாய் புறப்படுவோம்.

ஜனநாயக குரல்வளை நெறிக்கப்பட்ட நெருக்கடிகால நெருப்பாற்றை ஓராண்டு நீந்திக் கடந்த தளபதியவர்களின் வீரப்பிள்ளை அழைக்கிறார் விரைந்து புறப்படுவோம்!

இந்தியாவின் வரலாறு காவிரிக்கரையிலிருந்தே எழுதப் பட வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி வந்த வாழையடி வாழையாய் அழைக்கிறார். வாஞ்சையு டன் புறப்படுவோம்;

**வாழ்க தளபதி!**
**வெல்க உதயநிதி!**



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2க்கு உட்பட்ட பல்லாவரம் தெற்கு பகுதி 26 வது வட்ட திமுக சார்பாக சமத்துவ பொங்கல் விழா சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டு பொங்கலிட்டு சிலம்பாட்டம் பரதநாட்டியம் போன்ற பல்வேறு பாரம்பரிய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து மகளிர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கினார்கள். பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் வட்டக் கழகச் செயலாளர் எஸ். முஜிபுர் ரகுமான் பகுதி அவைத் தலைவர் வை. த .ர.மூர்த்தி பகுதி துணைச் செயலாளர் மீனா வட்டக் கழக நிர்வாகிகள் ராமமூர்த்தி ஆனந்த் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்

## சிவகங்கை தெற்கு ஒன்றியக் கழகம் சார்பில் சமத்துவப் பொங்கல் விழா!

சிவகங்கை. ஜன. 18-

சிவகங்கை தெற்கு ஒன் றிய கழகத்தின் சார்பில் அலு வலகமான அறிவாலயம் முன் பாக சமத்துவப் பொங்கல் விழா ஒன்றியக் கழகச் செய லாளர் எம்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

பொங்கல் விழாவினை முன்னிட்டு அனை வருக்கும் பொங்கல் மற்றும் கரும் பினை ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் வழங்கி னார். இந்த நிகழ்ச்சியில் நிர் வாகி கள் பஞ்ச வர்ணம், முத் துக்குமார், தங்கச்சாமி, சுரேஷ், மகளிர் அணி ராஜேஸ்வரி, மாவட்ட மகளி ரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மகளிரணி நிர்வாகிகள் மார்கரெட்க மலா, திலகவதி கண்ணன், சிங்க முத்து, உட்பட நிர்வா கிகள் கலந்து கொண்டனர்.

‘நான் முதல்வன் திட்டத்தால்’

## மிகப் பெரும் சமூக மாற்றம்!

இருசக்கர வாகன ஷோரூமில் வண்டியை விட்டுவிட்டு அமர்ந்திருந் தேன் ஒரு ஆண்டுக்கு முன்பு படித்த மாணவர் ஒருவர் நின்று இரண்டு ஐம் பதாயிரம் ரூபாய் நோட்டு கட்டுகளை எண்ணிக்கொண்டு இருந்தார்

என்ன தம்பி நல்லா இருக்கியா என் றதும் நல்லா இருக்கேன் சார் ஒரு வரு ஷமா வேலை பார்த்தேன் இப்போ அப் பாவுக்கு பைக் வாங்கி கொடுக்கலாம் என்று வந்தேன் என்றால் மனதெல் லாம் நிறைந்து விட்டது.

கூடுதல் செய்தி என்னவென்றால் கடந்த ஆண்டு “நான் முதல்வன்” திட் டத்தின் கீழ் பயிற்சி பெற்று அந்த மாண வர் கல்லூரியில் வளாக நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்று அரசின் மூலம் நேரடியாக தனியார் துறையில் பணி யில் சேர்ந்தார் என்பதுதான் மிக முக்கி யமான செய்தி

கழக அரசு என்ன செய்திருக்கி றதோ, இல்லையோ கண்ணுக்குத் தெரியாமல் மிகப்பெரிய சமூக மாற் றத்தை நிகழ்த்தி இருக்கிறது என்பதே உண்மை

நன்றி தளபதியாரே
நன்றி திராவிட மாடல் அரசே

M. K. Stalin
Udhayanidhi Stalin

**- முனைவர் முகிலன்**

நெல்லை மாவட்டம் - இராதாபுரத்தில்

## முத்துவேலர் அஞ்சுகத்தம்மாள் அறக்கட்டளை சார்பில் சமத்துவப் பொங்கல்!

### சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தொடங்கி வைத்தார்!

நெல்லை, ஜன.18 -

நெல்லை மாவட்டம் இராதாபுரத்தில் கலைஞர் அவர்களின் பெற்றோர்கள் முத்துவேலர் அஞ்சுகத்தம் மாள் அறக்கட்டளை சார் பில் தமிழர் திருநாளை முன் னிட்டு சமத்துவப் பொங்கல் 200க்கும் மேற்பட்ட பெண் கள் பொங்கலிடும் வழிபாடு மற்றும் நலத்திட்ட உதவி கள் வழங்கும் நிகழ்வு சட் டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்றது.

கழகத் தலைவர் முதல மைச்சர் அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க தமிழ்நாடு முழுவதும் தமிழர் திருநா ளான சமத்துவப் பொங்கல் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

அதன்படி நெல்லை மாவட்டம் இராதாபுரத் தில் காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள முன் னாள் முதல்வர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்க ளின் பெற்றோர்களான முத் துவேலர் அஞ்சுகத்தம்மாள் ஆகியோரின் திருவுருவச் சிலைக்கு சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தலை மையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட் டது.அதனைத் தொடர்ந்து சிலை அமைப்புக்குழு சார் பில் 15 வது நிகழ்வாக தமி ழர் திருநாளான சமத்துவப் பொங்கல் விழாவை சட்ட பேரவைத் தலைவர் மு.அப் பாவு துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சுற்று வட் டார கிராமங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட பெண் கள் பங்கேற்று சமத்துவப் பொங்கல் இட்டனர். தொடர்ந்து தமிழர்களின் பண்பாடு கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் கரகாட் டம், ஒயிலாட்டம், குதிரை ஆட்டம், மாடாட்டம், கிழ வன், கிழவி ஆட்டம், கம் பாட்டம், நையாண்டி மேளம், நாதஸ்வரம் என பல்வேறு கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற் றது.கலைஞர் அவர்களால் கலைமாமணி விருது பெற்று தற்போது வரை கிராமிய கலையில் ஈடுபட்டு வரும் கலைஞர்கள் கௌரவிக்கப் பட்டனர்.

சமத்துவப் பொங்கலை முன்னிட்டு நலத்திட்ட உத விகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு வழங் கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் வி. எஸ். ஆர். ஜெகதீஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக்,ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, ராஜன் உள்பட ஊராட்சி மன்றத் தலைவர் கள்,கழகத்தினர் பொதுமக் கள் கலந்து கொண்டனர்.

வட்டச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் தலைமை! எழும்பூர்

## 99வது வட்டத்தில் 500 பேருக்கு அறுசுவை உணவு! அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

### தயாநிதி மாறன் எம்.பி. - கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, ஜன. 18-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்குப் பகுதி , 99வது வட்டக் கழகம் சார்பில் தை -1 தமிழ்ப்புத்தாண்டு - பொங்கல் விழாவை யொட்டி 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கல் நிகழ்ச்சி 15.01.2024 - திங் கள் காலை 8 மணியளவில் புரசைவாக்கம், பொன் னன் தெருவில் நடைபெ ற்றது.

இவ்விழாவில் மாவட் டச் செயலாளர் - அமைச் சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு பொதுமக்க ளுக்கு அறுசுவை உணவை வழங்குகினார்.

வட்டச் செயலாளர் ஆர். எம். ரங்கநாதன் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ., கே.எஸ்.ரவிச் சந்திரன், சொ.வெலு, கோ.மணி, புனிதவதி எத்தி ராசன் , பரிதி இளம் சுருதி, ஜி.தாமோதரன், பி.சி.சம் பத்குமார், டி.செபாஸ்டின், வி.ரவி, ஏ.அஜித், சரவ ணன், இ.எம்.ராஜன், எம். ராஜ், ஜெ.பானு, பி.புஷ்ப லதா, கே.ஆர்.முரளி, பி. வரதராஜன், ரா.முரளி, எம்.கோமளா, ஆர்.எஸ். வெங்கடேசன், ஏ.சுகுமார், என்.சீனிவாசன், பி.சிவா, ஆர். மாது, எஸ்.மோகன், உள் ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கழக தலைமை இலக்கிய அணி துணைத் தலைவர்

## கவிச்சுடர் கவிதைப் பித்தன் தாயார் லூர்து மேரி மறைவு!

### புதுக்கோட்டையில் இன்று இறுதி ஊர்வலம்! கழக முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, ஜன. 17 -

கழக தலைமை இலக்கிய அணித் துணைத் தலைவ ரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கவிச்சு டர் கவிதைப் பித்தன் அவர் களின் தாயார் லூர்துமேரி மறைவெய்தினார் என் பதை அறிவிக்க வருந்துகி றோம்.

கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச் சுடர் கவிதைப் பித்தன், ஓய்வுபெற்ற வங்கி அதிகாரி செல்லத்துரை, கழகப் பொதுக்குழு உறுப்பினரும் நகர்மன்ற உறுப்பினருமான இரா.சு. சந்தோஷ் ஆகியோ ரின் தாயார் திருமதி. லூர்து மேரி ராஜா சுப்பையா அவர்கள் நேற்று (17.1.2024) மறைவெய்தினார் என் பதை அறிவிக்க வருந்துகி றோம்.

அன்னாரது இறுதி ஊர்வ லம் இன்று (18.1.2024 ) மாலை 4 மணியளவில், புதுக்கோட்டை காந்தி நக ரில் உள்ள அன்னாரது இல் லத்திலிருந்து புறப்பட்டு இறுதி நிகழ்வுகள் நடைபெ றுகின்றன. இதில் கழக முன் னணியினர் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்துகின்றனர்.

ரெயின்போ என்.விஜயகுமார் ஏற்பாடு ! வி.விஜயலட்சுமி விஜயகுமார் முன்னிலை !

## 48 வது வட்டத்தில் பொங்கல் விழா ! 1000 பேருக்கு நலஉதவிகள் !

### தா.இளையஅருணா வழங்கினார் ! இரா.பாலன் வரவேற்புரை !

சென்னை ஜன:17

சென்னை மாநக ராட்சி இராயபுரம் 48வது வார்டு சார்பில் தமிழர் திரு நாள் பொங்கல் விழாவை முன்னிட்டு (14.01.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை டி.எச்.ரோடு அன்னை மஹாலில் ரெயின்போ என்.விஜயகுமார் ஏற்பாட் டில் மாமன்ற உறுப்பினர் வி.விஜயலஷ்மி விஜ யகு மார் முன்னிலை யில் வட்ட கழக செயலாளர் இரா.பாலன் வரவேற்புரை யில் சென்னை மாநகராட்சி 48வது வார்டு உட்பட தூய்மை பணியாளர் கள்,குடிநீர் வாரியம் ஊழி யர்கள், அரசு பள்ளி ஆசிரி யர்கள்,சாலை பணி யாளர்கள், அங்கன்வாடி ஆசிரியர்கள், கூட்டுறவு துறை ஊழியர்கள்,அரசு மருத்துவமனை செவிலியர் கள், சுகாதார பணியாளர் கள் மற்றும் இராயபுரம் பகு திகளில் உள்ள கழக முன்னோடிகள் என ஆயி ரம் நபர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு (புடவை, வேஸ்டி, சட்டை, நான் ஸ்டிக் தோசை தவா, காலண்டர்,கரும்பு, அடங் கிய பொங்கல் பரிசு தொகுப்பினை சென்னை வடக்கு மாவட்டச் செயலா ளர் தா.இளையஅருணா வழங்கினார்.

இதில் சிறப்பு விருந் தினர்களாக இரா.நரேந்தி ரன், ஆர்.எம்.டி.ரவீந்திரன், இரா.கருணாநிதி, நேதாஜி யு.கணேசன் எம்.சி, மூ. கோபி, நாகம்மை கருப் பையா, வே.சிவகுமார், ந. சண்முகம், எஸ்.ரமேஷ், டி. கமலகண்ணன், பா.வேளா ங்கன்னி எம்.சி, விமலா எம். சி, சென்னை மாநகராட்சி உதவி செயற் பொறியாளர் கண்ணன், ஏ.டி.மணி, பா.சோமசுந்திரமூர்த்தி, என்.மருதுகணேஷ், வெ.சு. சத்தியநாரயண்,காணிக்கை நாதன், சு.திருஞானம், இ. மதன், வண்ணை மோகன், எம்.அன்வர், எஸ்.யுவராஜ், எம்.பிரபு, வழக்கறிஞர் மதி, கோ.அண்ணாதுரை, ரசூல்மொய்தீன், ஆர். பி.சேகர், கோ.நித்தியா னந் தம், டபிஎல்.யு.சினிவாசன், பாபா சினிவாசன், சின் ராஜ், எல்.குணசேகரன், பாலாஜி, எஸ்.சார்லஸ், எம்.ராமசந்திரன், மு. ராசன், எம்.கல்யாணி, அத் திரிபேகம், ரசுல்பீ.எம்.பாஸ் கர், ரேவதி, பார்வதிபாய், மற்றும் நிகழ்ச்சி ஒருங்கி ணைப்பாளர்கள் ஏ.திருப் பதி, பி.அன்பழகன், இரு. முருகேச பாண்டியன், என். சிவகுமார், ஜி.தியாகராஜன், வண்ணை வே.விஜயன், எம்.எஸ்.பழனி, எண்ணூர் மணிகண்டன், கே.ஆனந்த பாபு, ஆர்.கார்த்திக், எஸ். சந்தோஷ், இராயபுரம் கே.மணி, இனோவா கே.பாலாஜி, சைன்ஷா, மற் றும் இராயபுரம் கழக நிர் வாகிகள் 48 மற்றும் 48(அ) வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்றனர்.

தமிழர் திருநாளை முன்னிட்டு

## நெய்வேலி நகரப்பகுதியில் கொடியேற்று நிகழ்ச்சி!

### சபா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நெய்வேலி, ஜன. 18 -

நெய்வேலி நகர பகுதியில் தமிழர் திருநாளை முன்னிட்டு அனைத்து பகுதிக ளிலும் கிளைக் கழக நிர்வாகி கள் சார்பில் கழக கொடி ஏற் றும் நிகழ்ச்சி நடைபெற்றது. நெய்வேலி சட்டமன்ற உறுப் பினர் சபா ராஜேந்திரன் கலந் துகொண்டு டவுன்ஷிப் பகுதி யில் வீதி வீதியாக சென்று சுமார் 45 இடங்களில் கழக நிர்வாகிகளுடன் சென்று கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப் பினர் ராசவன்னியன், பண் ருட்டி ஒன்றிய குழு தலைவர் சபா பாலமுருகன், நகரச் செயலாளர் பக்கிரிசாமி, தொ.மு.ச. தலைவர் திருமாவ ளவன், பொதுச்செயலாளர் பாரி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் புகழேந்தி, நெய் வேலி நகர அவைத்தலைவர் நன்மாற பாண்டியன், குறிஞ் சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குணசேகரன், பொருளாளர் ஐயப்பன், மாவட்ட கவுன்சில் செயலா ளர் பொன்முடி, மத்திய அர சின் சிவில் சப்ளை கார்பரே ஷன் சாய் செந்தில், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞ ரணி துணை அமைப்பாளர் கள் ராஜேஷ், சதாம், சங்க உறுப்பினர்கள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**கழக இளைஞர் அணியின் 2–வது மாநில மாநாடு சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் வரும் 21–ஆம் தேதி ஞாயிறு அன்று நடைபெற உள்ள நிலையில், மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்டம், சென்னையிலிருந்து 18.01.2024 (வியாழக்கிழமை) இன்று காலை தொடங்குகிறது. சென்னை அண்ணா சாலை சிம்சன் சந்திப்பில் உள்ள பெரியார் சிலையிலிருந்து மாநாட்டுச் சுடர் ஓட்டத்தை, மாண்புமிகு அமைச்சர் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காலை 7.00 மணி அளவில் தொடங்கி வைக்கிறார்.**

**மாநாட்டுச் சுடர் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி வழியாக 316 கிலோ மீட்டர் தூரம் பயணித்து சேலம் மாநாட்டுத் திடலைச் சென்றடைகிறது. இந்த மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்டத்தில் அந்தந்த மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாநாட்டுச் சுடர் தொடர் ஓட்ட விவரம் வருமாறு:**

| நாள் | நேரம் | இடம் / தொகுதி / மாவட்டம் | பங்கேற்போர் |
|---|---|---|---|
| 18.01.2024 | 7:15 AM | அண்ணா சிலை,<br>துறைமுகம்,<br>சென்னை கிழக்கு. | **பி.கே.சேகர்பாபு** மாவட்டச் செயலாளர்.<br>**எஸ்.ஜோயல்** துணைச் செயலாளர்.<br>**டி.லோகேஷ்** மாவட்ட அமைப்பாளர்,<br>சென்னை கிழக்கு. |
| 18.01.2024 | 7:30 AM | எல்.ஐ.சி.,<br>ஆயிரம் விளக்கு,<br>சென்னை மேற்கு. | **நே.சிற்றரசு** மாவட்டச் செயலாளர்.<br>**இன்பா ரகு** துணைச் செயலாளர்.<br>**வழக்கறிஞர் ப.பிரகாஷ்** மாவட்ட அமைப்பாளர்,<br>சென்னை மேற்கு. |
| 18.01.2024 | 7:45 AM | ஸ்பென்சர் சிக்னல்<br>ஆயிரம் விளக்கு,<br>சென்னை மேற்கு. | **நா.இளையராஜா** துணைச் செயலாளர்.<br>**கே.வி.லோகேஷ்** மாவட்ட அமைப்பாளர்,<br>திருவள்ளூர் கிழக்கு. |
| 18.01.2024 | 8:00 AM | மெட்ரோ ரயில் நிலையம்,<br>ஆயிரம் விளக்கு,<br>சென்னை மேற்கு. | **ப.அப்துல் மாலிக்** துணைச் செயலாளர்.<br>**கே.சுரேஷ்குமார்** மாவட்ட அமைப்பாளர்,<br>திருவள்ளூர் மத்திய. |
| 18.01.2024 | 8:15 AM | சர்ச் பார்க் பள்ளி,<br>ஆயிரம் விளக்கு,<br>சென்னை மேற்கு. | **கே.இ.பிரகாஷ்** துணைச் செயலாளர்.<br>**ம.கிரண்** மாவட்ட அமைப்பாளர்,<br>திருவள்ளூர் மேற்கு. |
| 18.01.2024 | 8:30 AM | காமராஜர் அரங்கம்,<br>ஆயிரம் விளக்கு,<br>சென்னை மேற்கு. | **பிரபு கஜேந்திரன்** துணைச் செயலாளர்.<br>**ஜி.துர்காபிரசாத்**<br>மாநகர அமைப்பாளர், ஆவடி மாநகரம். |
| 18.01.2024 | 8:45 AM | டி.எம்.எஸ்.,<br>ஆயிரம் விளக்கு,<br>சென்னை மேற்கு. | **பி.எஸ்.சீனிவாசன்** துணைச் செயலாளர்.<br>**ஜே.ஜே.எபினேசர்** மாவட்ட அமைப்பாளர்,<br>சென்னை வடக்கு. |
| 18.01.2024 | 9:00 AM | அண்ணா அறிவாலயம்,<br>ஆயிரம் விளக்கு,<br>சென்னை மேற்கு. | **ஜி.பி.ராஜா** துணைச் செயலாளர்.<br>**ஆர்.டி.மதன்குமார்**<br>மாவட்ட அமைப்பாளர், சென்னை வடகிழக்கு. |
| 18.01.2024 | 9:15 AM | அன்பகம்,<br>மயிலாப்பூர்,<br>சென்னை தென்மேற்கு. | **த.வேலு** எம்.எல்.ஏ. மாவட்டச் செயலாளர்.<br>**சி.ஆனந்தகுமார்** துணைச் செயலாளர்,<br>**ராஜா அன்பழகன்** மாவட்ட அமைப்பாளர்.<br>சென்னை தென்மேற்கு. |
| 18.01.2024 | 9:45 AM | நந்தனம் கலைக் கல்லூரி.<br>சைதாப்பேட்டை,<br>சென்னை தெற்கு. | **மாண்புமிகு மா.சுப்பிரமணியன்**<br>மாவட்டச் செயலாளர்,<br>**ஏ.எம்.வி.பிரபாகர ராஜா,** மாவட்ட அமைப்பாளர்<br>சென்னை தெற்கு. |
| 18.01.2024 | 10:30 AM | கிண்டி கத்திபாரா,<br>ஆலந்தூர்,<br>காஞ்சிபுரம் வடக்கு. | **மாண்புமிகு தா.மோ.அன்பரசன்**<br>மாவட்டச் செயலாளர்,<br>**கோல்டு டி.பிரகாஷ்** மாவட்ட அமைப்பாளர்,<br>காஞ்சிபுரம் வடக்கு. |
| 18.01.2024 | 11:10 AM | ஆலந்தூர் மெட்ரோ,<br>ஆலந்தூர்,<br>காஞ்சிபுரம் வடக்கு. | |
| 18.01.2024 | 12.45 PM | மீனம்பாக்கம் விமான நிலையம்,<br>ஆலந்தூர்,<br>காஞ்சிபுரம் வடக்கு. | |
| 18.01.2024 | 01.45 PM | பல்லாவரம்,<br>பல்லாவரம்,<br>காஞ்சிபுரம் வடக்கு. | |
| 18.01.2024 | 03.00 PM | தாம்பரம்,<br>தாம்பரம்,<br>காஞ்சிபுரம் வடக்கு. | **மாண்புமிகு தா.மோ.அன்பரசன்**<br>மாவட்டச் செயலாளர்,<br>**பி.கே.எ.சத்தியபிரபு,** மாநகர அமைப்பாளர்<br>காஞ்சிபுரம் வடக்கு. |
| 18.01.2024 | 4:00 PM | பெருங்களத்தூர்,<br>தாம்பரம்,<br>காஞ்சிபுரம் வடக்கு. | **மாண்புமிகு தா.மோ.அன்பரசன்**<br>மாவட்டச் செயலாளர்,<br>**கோல்டு டி.பிரகாஷ்** மாவட்ட அமைப்பாளர்,<br>காஞ்சிபுரம் வடக்கு. |
| 18.01.2024 | 5:00 PM | வண்டலூர்.<br>செங்கல்பட்டு,<br>காஞ்சிபுரம் வடக்கு. | |
| 18.01.2024 | 7:00 PM | சிங்கப்பெருமாள்கோயில்,<br>செங்கல்பட்டு,<br>காஞ்சிபுரம் வடக்கு. | |
| 18.01.2024 | 8:15 PM | செங்கல்பட்டு (பைபாஸ்),<br>செங்கல்பட்டு,<br>காஞ்சிபுரம் வடக்கு. | |

| நாள் | நேரம் | இடம் / தொகுதி / மாவட்டம் | பங்கேற்போர் |
|---|---|---|---|
| 19.01.2024 | 12:15 AM | மதுராந்தகம் (பைபாஸ்),<br>மதுராந்தகம்,<br>காஞ்சிபுரம் தெற்கு. | **க.சுந்தர்** எம்.எல்.ஏ.,<br>மாவட்டச் செயலாளர்,<br>**வழக்கறிஞர் அ.யுவராஜ்**<br>மாவட்ட அமைப்பாளர்<br>காஞ்சிபுரம் தெற்கு. |
| 19.01.2024 | 3:15 AM | மேல்மருவத்தூர்,<br>மதுராந்தகம்,<br>காஞ்சிபுரம் தெற்கு. | |
| 19.01.2024 | 4:15 AM | அச்சரப்பாக்கம்,<br>மதுராந்தகம்,<br>காஞ்சிபுரம் தெற்கு. | |
| 19.01.2024 | 8:30 AM | திண்டிவனம் (பைபாஸ்),<br>திண்டிவனம்,<br>விழுப்புரம் வடக்கு. | **மாண்புமிகு செஞ்சி கே.எஸ்.மஸ்தான்**<br>மாவட்டச் செயலாளர்,<br>**க.ஆனந்த்** மாவட்ட அமைப்பாளர்,<br>விழுப்புரம் வடக்கு. |
| 19.01.2024 | 9:30 AM | மயிலம்,<br>மயிலம்,<br>விழுப்புரம் வடக்கு. | |
| 19.01.2024 | 12:30 PM | விக்கிரவாண்டி,<br>விக்கிரவாண்டி,<br>விழுப்புரம் தெற்கு. | **நா.புகழேந்தி** எம்.எல்.ஏ.,<br>மாவட்டச் செயலாளர்,<br>**செ.தினகரன்** மாவட்ட அமைப்பாளர்,<br>விழுப்புரம் தெற்கு. |
| 19.01.2024 | 2:20 PM | விழுப்புரம் (பைபாஸ்),<br>விழுப்புரம்,<br>விழுப்புரம் தெற்கு. | |
| 19.01.2024 | 5:00 PM | அரசூர்,<br>உளுந்தூர்பேட்டை,<br>கள்ளக்குறிச்சி வடக்கு. | **தா.உதயசூரியன்** எம்.எல்.ஏ.,<br>மாவட்டச் செயலாளர்,<br>**எஸ்.அருணராஜ்** மாவட்ட அமைப்பாளர்,<br>கள்ளக்குறிச்சி வடக்கு. |
| 19.01.2024 | 9:30 PM | உளுந்தூர்பேட்டை,<br>உளுந்தூர்பேட்டை,<br>கள்ளக்குறிச்சி வடக்கு. | |
| 19.01.2024 | 2:30 PM | தியாக துருகம்,<br>கள்ளக்குறிச்சி,<br>கள்ளக்குறிச்சி தெற்கு. | **வசந்தம் க.கார்த்திகேயன்**<br>எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர்,<br>**வி.பி.தாகப்பிள்ளை** மாவட்ட அமைப்பாளர்,<br>கள்ளக்குறிச்சி தெற்கு. |
| 19.01.2024 | 4:10 AM | கள்ளக்குறிச்சி,<br>கள்ளக்குறிச்சி,<br>கள்ளக்குறிச்சி தெற்கு. | |
| 20.01.2024 | 6:20 AM | சின்ன சேலம்,<br>சின்ன சேலம்,<br>கள்ளக்குறிச்சி தெற்கு. | |
| 20.01.2024 | 9:00 AM | தலைவாசல்,<br>கெங்கவள்ளி,<br>சேலம் கிழக்கு. | **எஸ்.ஆர்.சிவலிங்கம்**<br>**ஆர்.ராஜேந்திரன்**<br>**டி.எம்.செல்வகணபதி**<br>மாவட்டச் செயலாளர்கள்,<br>**வீரபாண்டி டாக்டர் ஆ.பிரபு**<br>**மு.மணிகண்டன்**<br>**சௌ.அருண் பிரசன்னா**<br>**கேபிள் சரவணன்**<br>மாவட்ட–மாநகர அமைப்பாளர்கள்,<br>சேலம். |
| 20.01.2024 | 11:00 AM | ஆத்தூர்,<br>ஆத்தூர்,<br>சேலம் கிழக்கு. | |
| 20.01.2024 | 1:30 PM | பெத்தநாயக்கன்பாளையம்,<br>ஆத்தூர்,<br>சேலம் கிழக்கு. | |

**தி.மு.க. இளைஞர் அணி**
**அன்பகம், சென்னை – 18**
**நாள் : 17.01.2024**


கலைஞர் 100
1924 - 2023
நாள் : 18.01.2024
காலை 6.30 மணியளவில்.
இடம் : தந்தை பெரியார் சிலை,
அண்ணா சாலை, சென்னை.
பகுத்தறிவுச் சுடரேந்தும் பெரியாரின் படை வீரனே !
பொதுவுடமைச் சிந்தனைக் கொண்ட
அண்ணாவின் கொள்கைத் தீரனே !
மாநில உரிமையை மீட்டெடுக்க போரிடும்
கலைஞரின் பெருமைமிகு பேரனே !
எந்நாளும் புத்துணர்வுடன் உழைக்கும் எங்கள்
தலைவர் தளபதியின் இலட்சிய வாரிசே !
சுடரேந்தி ஓடிவா !
தமிழ்நாட்டில் நீ ஏந்தும் சுடர் இமயத்தில் ஒளி வீசி எரியட்டும் !
திராவிடமாடல்
இந்தியா முழுமைக்கும் பரவட்டும் !
இளைஞரணி மாநாடு வரலாறு படைத்து
வெற்றியடையட்டும் !
அன்புடன் : வழக்கறிஞர் இ.பரந்தாமன் பி.ஏ.பி.எல்.,எம்.எல்.ஏ
கழக சட்டத்துறை இணைச் செயலாளர் - எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
நம்ம EGMORE


# உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!














உலகப்புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விளையாட்டு போட்டியை கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து சீறிப்பாய்ந்து சிறப்பாக விளையாடிய காளைகளுக்கும், திமிலைப்பிடித்து காளையை அடக்கிய காளையர்களுக்கும் தங்க மோதிரம், தங்கக்காசுகள் உள்ளிட்ட சிறப்பு பரிசுகள் வழங்கினார். மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் உயர்கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், கால்நடைத்துறை மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், பூமிநாதன், தமிழரசி, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் கழக நிர்வாகிகள் அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.




2 ஆவது மாநில மாநாட்டுக்கு, மாநில உரிமை மீட்பு முழக்கமாக நடைபெறவுள்ள இளைஞர் அணி மாநாட்டுக்கான பாடலை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள், அண்ணா அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவுருவச்சிலைகள் அருகே நேற்று வெளியிட்டார். நிதி உரிமை – கல்வி உரிமை – மொழி உரிமை – வேலைவாய்ப்பு உரிமை என ஒட்டுமொத்தமாக நம் மாநில உரிமைகளை நிலைநாட்டிடும் வகையில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணி மாநாட்டின் லட்சியத்தை உணர்த்தும் வகையில் இம்மாநாட்டுப் பாடல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் அமைச்சர்கள் உள்பட கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.




விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முக்கிய மைல் கல்லாக அமையவுள்ள Khelo India Youth Games, சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் 19 ஆம் தேதி தொடங்கவுள்ளது. இதனையொட்டி, மதுரையில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு அரங்க மைதானத்தில் நடைபெற்று வரும் ஏற்பாட்டு பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். மேலும் பாதுகாப்பு வசதி அடிப்படை சுகாதார வசதிகள் ஓடுதளம் பார்வையாளர் மாடம் வீரர்கள் தங்குமிடம் போன்றவற்றை மேம்படுத்துவதற்காக நடைபெறும் பணிகளை பார்வையிட்டு, அவை தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்தார். உடன் அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### எக்காலத்திலும் பண்பாட்டைக் காப்போம்!

# தமிழரின் வீரவிளையாட்டை ஊக்குவிப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளப் பதிவு!

**சென்னை, ஜன.18–**

**“எக்காலத்திலும் பண்பாட்டைக் காப்போம்! தமிழரின் வீரவிளையாட்டை ஊக்குவிப் போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழரின் வீர விளையாட்டான ஏறுதழுவல் குறித்து தமது சமூக வலைதளங் களில் பதிவிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் தமது சமூக வலை தளங்களில் பதிவிட்டிருப் பதாவது:

தமிழரின் வீரவிளையாட்டான ஏறுதழுவுதல் ஜல்லிக்கட்டு போட்டி 100க்கும் மேற்பட்ட இடங்க ளில் நடைபெற்று, அதில் திமில் பெருத்த 66 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட காளைகளை 25 ஆயிரத் துக்கும் மேற்பட்ட காளையர்கள் களத்தில் சந்தித்துள்ளனர்.

புழுதி பறந்த நிலத்தில் நடந்த பண்பாட்டு நிகழ்வை, சுமார் 3 இலட்சம் பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர். வெற்றி பெற்ற காளைக ளும் - வீரர்களும் பரிசுகள் பெற்றார்கள்.

திராவிட மாடல் ஆட்சியில் பண்பாட்டின் அடை யாளமாய் விளங்கும் ஏறுதழுவுதலுக்கென மதுரையில் மிகப் பிரமாண்டமாகக் கட்டப்பட் டுள்ள “கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங் கத்தை” வரும் 24-ஆம் நாள் திறந்து வைத்து போட்டிகளைக் காண மதுரை, அலங்காநல்லூர் - கீழக்கரைக்கு வருகிறேன்.

தமிழரின் வீரவிளையாட்டை ஊக்குவிப்போம்! எக்காலத்திலும் பண்பாட்டைப் காப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளங்களில் பதிவிட்டுள்ளார்.

### சிவகங்கை மாவட்டத்தில் ஜல்லிக்கட்டுப் போட்டி:

# உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன. 18–

சிவகங்கை மாவட்டம், சிராவ யல் ஊராட்சி – மஞ்சுவிரட்டுப் போட்டி நடைபெறும் இடத்திற்கு வெளியே நடைபெற்ற சம்பவத்தில் உயிரிழந்த இருவர் குடும்பத்திற்கு இரங்கல் மற் றும் நிதியுதவி அளிக்க உத்தரவிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம், திருப்பத் தூர் வட்டம், சிராவயல் ஊராட்சியில் நேற்று (17.01.2024) மஞ்சுவிரட் டுப் போட்டி நடைபெறும் இடத்திற்கு வெளியே நடைபெற்ற சம்பவத்தில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சிராவயல் ஊராட்சி, மருதங் குடி கிராமத்தைச் சேர்ந்த முத்துமணி (வயது 32) மற்றும் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கே.வளையப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் பாஸ்கரன் (வயது 12) ஆகிய இருவரும் எதிர்பாராதவித மாக படுகாயம் அடைந்து சம்பவ இடத் திலேயே உயிரிழந்தார்கள் என்ற துயரமானச் செய்தியை கேட்டு மிக வும் வேதனையடைந்தேன்.

இவர்களை இழந்து வாடும் குடும் பத்தினருக்கும், அவர்களது நண்பர் கள் மற்றும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள் வதோடு. உயிரிழந்த இருவரின் குடும்பத்தின ருக்கும் முதலமைச் சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க வும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாளை ஒட்டி

# குன்றத்தூரில் 5000 பேருக்கு இலவச வேட்டி - சேலைகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்.

காஞ்சிபுரம், ஜன. 18-

தமிழ் புத்தாண்டு - பொங்கல் திருநாளை ஒட்டி குன்றத்தூரில் 5000 பேருக்கு இலவச வேட்டி - சேலைகளை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங் கினார்.

தமிழ் புத்தாண்டு - பொங்கல் திருநாளை ஒட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்ப ரசனின் தந்தையார் குன் றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு முன்னாள் தலைவர் தா.மோகலிங்கம் அவர் கள் காணும் பொங்கல் அன்று குன்றத்தூரில் உள்ள ஏழை - எளிய மக்க ளுக்கு 1986-ஆம் ஆண்டு வேட்டி - சேலை வழங்க தொடங்கி ஆண்டு தோறும் தொடர்ந்து வழங்கி வந்தார்.

அவரது மறைவுக்குப் பின் அவரது மகன் அமைச் சர் தா.மோ.அன்பரசன் கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் புத்தாண்டு - பொங் கல் திருநாளை ஒட்டி குன் றத்தூரில் உள்ள பொது மக்களுக்கு தொடர்ந்து வேட்டி - சேலை சிறப் பாக வழங்கி வருகிறார்.

இந்த ஆண்டும் தமிழ் புத்தாண்டு - பொங்கல் திருநாளை ஒட்டி குன்றத்தூரில் உள்ள அமைச்சர் தா.மோ.அன்ப ரசன் தனது இல்லத்தின் முன்பு திரண்ட 5000-க்கு மேற்பட்ட ஏழை - எளிய மக்களுக்கு இலவச வேட்டி - சேலை மற்றும் காலண்டர் வழங்கினார்.

காலை 9 மணிக்கு அமைச்சர் தா.மோ.அன்ப ரசன் பொதுமக்களுக்கு வேட்டி - சேலை வழங்க தொடங்கினார். பகல் 1 மணி வரை 5000-க்கு மேற் பட்ட ஏழை - எளிய மக்க ளுக்கு வேட்டி - சேலை - காலண்டர் ஆகியவற்றை மகிழ்ச்சியுடன் வழங்கி னார்.

வேட்டி - சேலை - காலண்டரை மனமகிழ்ச்சி யோடு வாங்கி சென்ற மக் களால் குன்றத்தூரே குதூகலமாக காட்சி அளித் தது பார்க்கும் மக்கள் கையில் எல்லாம் வேட்டி - சேலை - காலண்டர் காணப்பட்டது. மொத்தத் தில் குன்றத்தூரே நேற்று விழாக்கோலம் பூண்டிருந்தது.




தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் திருநாளை ஒட்டி குன்றத்தூரில் 5000க்கு மேற்பட்ட பொது மக்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் வேட்டி சேலை வழங்கினார். அருகில் குன்றத்தூர் நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### சேலம் 21ஆம் தேதி இளைஞர் அணி மாநாட்டிற்கு

# சிவகங்கை மாவட்டத்திலிருந்து 300 வாகனங்களில் செல்ல முடிவு!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தகவல்!

சிவகங்கை, ஜன. 18 -

சிவகங்கை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட் டம் திருப்பத்தூரில் தனி யார் திருமண மஹாலில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலை யில் நடை பெற்றது. மாவட்ட கழக துணை செயலாளர் த. சேங்கை மாறன் வரவேற் றுப் பேசினார்.

கூட்டத்தில் திருமதி தமி ழரசி ரவிக்குமார் எம் எல்.ஏ. பேசினார். செயற் குழு கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுற வுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் பேசியதாவது .

கழகத் தலைவர் முதல் வர் தளபதி அவர்கள் தலைமையி லான அரசு கடந்த 21/2 ஆண்டுகளாக தமிழகத்தில் மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. மக்களின் தேவைகளை அறிந்து திட்டங்களை நமது முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார் .கழக மாநில இளைஞ ரணி செயலாளர் அமைச் சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வருகிற 21ஆம் தேதிசேலத் தில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாடு தமிழகத்தில் இது வரை நடைபெற்ற அனைத்து மாநாட்டினை மிஞ்சும் வகையில் நடை பெற உள்ளது. இந்த மாநாடு நடைபெற

உள்ள பாராளுமன்ற தேர்தலின் வெற்றிக்கு அடித்தளமாக அமைய உள்ளது. வருகின்ற நாடா ளுமன்ற தேர்தலில் இந் தியா கூட்டணி வெற்றி பெறும் வகையில் சிறப் பான முறையில் திருப்பு முனை மாநாடாக அமைய உள்ளது. இம்மாநாட்டில் சிவகங்கை மாவட்டத்தி லிருந்து இளைஞரணி. யினர் மற்றும் கழகத்தினர் அதிக அளவில் பங்கேற்க வேண்டும். மாவட்டம் முழுவதி லிருந்து கழகத்தி னர் 300 வாகனங்களில் செல்வது என்று தீர்மா னிக் கப்பட்டுள்ளது. அதற் கேற்ப கழக சார்புஅணி கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், இணைந்து மாநாட்டிற்கு செல்வதற்கான ஏற்பாடு களை செய்திட வேண்டும்.

இதுவரை கழகத்தின் சார்பில் நடைபெற்ற அனைத்து மாநாடுகளிலும் சிவகங்கை மாவட்டத்திலி ருந்து அதிக அளவில் கழகத் தினர் பங்கேற்றார்கள். அதற்காக பரிசினையும் பெற்றுள்ளோம். அதைத் தொடர் ந்து சிவகங்கை மாவட்டத்திலிருந்து அதிக அளவில் கழகத்தினர் பங் கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பேசினார் .

இந்த கூட்டத்தில் முன் னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ்.மாரியப் பன்கென்னடி, மாவட்ட இளைஞரணி அமைப்பா ளர் நாகனிசெந்தில்குமார், மாவட்ட சிறுபான்மையி னர் நல அமைப்பாளர் என்.எம்.சாக்ளா, ஒன்றிய கழகச் செயலாளர்கள் எஸ். சண்முகவடிவேலு, விராமதி மாணிக்கம், கே.பால சுப்பிரமணியன், பூமணி, நா.நெடுஞ்செழி யன் , குன்னக்குடி சுப்பிர மணியன், சுப.சின்னதுரை கே.ஆர் . ஆனந்த் துரை. ராஜா மணி, எம்அண்ணா துரை, எம்.ஏ.கடம்பசாமி, ஆர்.எம். கென்னடி, எம். ஜெயராமன், திருமலை முத்துராம லிங்கம் ,யோக. கிருஷ்ணகுமார், வே. ஆரோக்கியசாமி, பூபால சிங்கம், ரவிச்சந்திரன், நாக னிரவி, ஆறு.செல்வராஜன், வே.தமிழ்மா றன் கா.வெங் கட்ராமன், பி.செல்வராஜ், நகர்கழக செயலாளர்கள் என்.குணசேகரன்,பெரி. பாலா,

க.பொன்னுச்சாமி, சி.எம். துரை ஆனந்த், பேரூர் கழக செயலாளர் கள் ஆர்.கார்த்தி கேயன், கே.பி.எஸ்.பழனியப்பன், அசோக், கதிர்வேல், பொதுக்குழு உறுப்பினர் கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, த. உதயகுமார், கரு. அசோகன். நிர்வாகிகள் , ஒன்றிய துணைச் செயலா ளர் முத்துக்குமார் ஷாஜ கான், காளிமுத்து , புதூர் கண்ணன் ராம.ரவி, பொருளாளர் ஏ.எம்.கண் ணன் உட்பட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் கள் கலந்துகொண்டார்கள்.



சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி, 78 அ வட்டம் சார்பில், தமிழ் புத்தாண்டு சமத்துவ பொங்கல் விழா வட்டச் செயலாளர் ந.பாலு தலைமையில்,பகுதி கழக செயலாளர் சொ.வேலு எம்.சி முன்னிலையில் நடைபெற்றது. விழாவில் 600 பேருக்கு அரிசி,வெல்லம்,கரும்பு, பெட்ஷீட் உள்ளிட்ட பொருட்களை மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர் பாபு வழங்கினார்.உடன் வி.சுதாகர், புனிதவதி எத்திராசன் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, கே.எஸ்.எம்.நாதன், தில்லைகுமார், ஜே.கே. கருணாகரன், கே.வள்ளி, சு.மனோகர், வி.அபாய், தி.தயாளன், ஆர்.பாபு, முரளிதரன், நாராயணன், கிருஷ்ணன், சபாஸ்டின், யோகேஷ் பாலாஜி உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அருப்புக்கோட்டையில் கபடிப் போட்டி நடைபெற்றது. இந்த விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு வெற்றி பெற்ற கபடி வீரர்களுக்கு பரிசுகள் வழங்கினர். இதில் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தார்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் வரும் 21 ஆம் தேதி கழக இளைஞரணி மாநில இரண்டாவது மாநாடு நடைபெறுகிறது. இதனையடுத்து மாநாட்டு திடலில் உள்ள பணிகளை வீட்டு வசதி வாரியத் துறை அமைச்சர் முத்துசாமி பார்வையிட்டார். மாவட்ட செயலாளர்கள் எஸ். ஆர். சிவலிங்கம், இரா.ராஜேந்திரன் எம் எல்.ஏ ,டி.எம்.செல்வகணபதி, மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார் ,சின்னதுரை, டாக்டர் தருண், ஏ.ஏ.ஆறுமுகம் ,ஒன்றிய செயலாளர்கள் மூர்த்தி, சிவராமன், தங்க மருதமுத்து, பேரூர் செயலாளர்கள் பாபு, வெங்கடேசன் , சோமசுந்தரம் , மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் அறிக்கை!

தேனி, ஜன. 18-

தேனி வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை நடைபெறுகிறது என்று மாவட்டக் கழகச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: தேனி வடக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் நாளை (19.01.2024) மாலை 5.00 மணிக்கு என்.ஆர்.டி நகரில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத்தலைவர் பி.டி.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள்,

ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், நகர் மன்ற தலைவர்கள், பேரூர்மன்ற தலை வர்கள், கழக முன்னோடி கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

ஜனவரி 21 ம் தேதி சேலம் மாநகரில் இளைஞரணி சார்பில் நடைபெற உள்ள இரண்டாவது மாநில இளைஞரணி மாநாடு குறித்து.

பாக பொறுப்பாளர்கள் பாக கமிட்டி உறுப்பினர்கள் பணிகள் குறித்து.

சார்பு அணி நிர்வாகிகள் பணிகள் குறித்து.

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இளைஞரணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெறும்

# இளைஞரணி மாநாட்டுச் சுடருக்கு குரோம்பேட்டையில் கழகத்தினர் வரவேற்பு!

## மாவட்டத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில்

பல்லவபுரம், ஜன. 18 -

கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு கழக இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது இமாநாட்டில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள். மாநாட்டு பந்தலில் ஏற்றப்பட்டுள்ள மாநில உரிமை மீட்பு மாநாடுச் சுடர் இன்று காலை 11 மணியளவில் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் வருகை தரவுள்ளது. அதற்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ. கருணாநிதி தலைமையில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

பல்லாவரம் வடக்கு பகுதி, பல்லாவரம் தெற்கு பகுதி, செம்பாக்கம் வடக்கு பகுதி ஆகிய பகுதி கழகங்களை சார்பாக நடைபெறும் வரவேற்பு விழாவுக்கு பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் தலைவருமான இ.ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் தெற்கு பகுதிகளின் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் செம்பாக்கம் வடக்கு பகுதி செயலாளர் ஏ. கே. கருணாகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சிக்கு மூன்று பகுதிகள் உள்ள வட்டக் கழகச் செயலாளர்கள் தங்கள் வட்டங்களில் உள்ள இளைஞரணி தம்பிமார்களை வெண்ணிற சீருடை அழைத்து வந்து விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்து விட வேண்டும். மேலும் வட்டக் கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் அனைவரும் இவ் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாவட்டத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தா.இளையஅருணா பங்கேற்பு!

# சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி ஆலோசனைக்கூட்டம்!

## வெ.சு.சத்யநாராயணன் அறிவிப்பு!

சென்னை ஜன:18

சென்னை வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வெ.சு. சத்தியநாராயணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை(19-1-2024) வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் ( தண்டையார்பேட்டை அப்போலோ மருத்துவமனை அருகில் ) 478, டி.எச்.ரோடு என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள்: மோ. ரவிகுமார், பிரசிடென்சி. சி.சதீஷ், ந.ம.மகேஷ்குமார், நி.எழிலரசன், எஸ்.சத்தீஸ்வரி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா. இளையஅருணா பங்கேற்று ஆலோசனை வழங்கினார்.

எனவே இக் கூட்டத்திற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கழக மாணவர் அணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 25-1-2024 அன்று காலை 8.00 மணியளவில் இராயபுரம் மூலக் கொத்தளம் இடுகாட்டில் உள்ள மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்துதல்

அன்று மாலை6.00 மணியளவில் சென்னை அண்ணா நகரில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொள்ளும் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுவது

*"United students of India"* சார்பில் 01-02-2024 அன்று சென்னையில் நடைபெறும் மாபெரும் பேரணி மாவட்ட மாணவர் அணி ஆக்கப் பணிகள்

இவ்வாறு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன் அறிவித்துள்ளார்.



சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டின் எழுச்சிப் பாடலாக 'உரிமை மீட்க வா' என்கிற பாடல் வெளியீடு சவுதி அரேபியா கிழக்கு மண்டலம் மயிலாடுதுறை வெங்கடேசன் திருச்சி ஆரிஃப் மக்பூல் தயாரிப்பில் பாடிய பாடலை கவிஞர் நாகூர் பாரி எழுதியவர்கள். தமிழ்நாடு சிறுபான்மை நல ஆணைய துணைத் தலைவர் கலைமாமணி டாக்டர் இறையன்பன் குத்தூஸ் பாடியவர். சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் வெளியிட லண்டன் அயலக அணி தி.மு.க. பொறுப்பாளர் பைசல் பெற்றுக் கொண்டார். இதில் முகவை சீனி முஹம்மது துறையூர் கமால் சவுதி அரேபியா அயலக அணியின் அபூ ரயான் ஆசிப், சிவக்குமார், நூர் முஹம்மது கான், கள்ளக்குறிச்சி ஃபாரூக், ஏர்போர்ட் கணேசன், ஜுபைல் யாசின் அஞ்சப்பர் ஜியான், திருச்சி யூனிஸ்.ஃபாரூக் ராஜா, சென்னை இம்ரான், முருகன் மாரிராஜ், ரவி, ரிஷி உணவகம் சாகுல், சென்னை ஜியான், நாகர்கோவில் சாகுல் ஹமீது, முகவை அப்துல் ரஹ்மான், மதுரா முத்து, தமாம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மயிலம் மத்திய ஒன்றியக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

மைலம், ஜன. 18 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் மயிலத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் ஒன்றிய கழக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

ஒன்றிய அவைத் தலைவர் பரசுராமன் தலைமை தாங்கினார்.

ஒன்றிய துணை செயலாளர்கள் சங்கர், தமிழரசன், சத்யா, சின்னதுரை, ஆகியோர் முன்னிலை வகித்தனர் ஒன்றிய செயலாளர் தழுதாளிசெழியன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர், முரசொலி மாறன் ஆகியோர் இல்லை. இந்த ஐம்பெரும் தலைவர்களை ஒன்றாக இணைத்து வாழும் வள்ளுவராக முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியை நடத்துகிறார்.

அந்த வகையில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் மூலம் முதல மைச்சரின் ஒரே ஒரு கையெழுத்தில் ஒன்னறைகோடி மகளிர் பயன் அடைந்து உள்ளார்கள் என்றால் உலக வரலாற்றில் தமிழ்நாட்டில் மட்டும்தான் இது போன்ற திட்டங்கள் நடைபெற்றுவருவதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் தமிழ்நாட்டில் புதுவை உட்பட 40 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்ற கழக கூட்டணியான இந்திய கூட்டணி வெற்றி பெறும் என்றும் இந்தியாவில் இந்தியா கூட்டணி அமோக வெற்றி பெறும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் உறுதிபட தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து 500க்கும் மேற்பட்ட தி.மு.க. நிர்வாகிகளுக்கு முழு கரும்புடன் கூடிய பொங்கல் பரிசு தொகுப்பினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

கூட்டத்தில் சேலத்தில் நடைபெறும் திமுக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில்கழக இளைஞரணி உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் பெருந்திரளாக பங்கேற்பது எனவும் தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழாவில் கழக செயல்வீரர்களை கௌரப்படுத்துதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக மேலும் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் நடைபெற்ற தமிழ் புத்தாண்டு சமத்துவ பொங்கல் விழாவை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா , மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன், பொதுக்குழு உறுப்பினர் வீடு ரவி,மாவட்ட பிரதிநிதிகள் ஜெயராமன் ஆர்.சி. துரை, பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




மதுரை மாநகர் மாவட்டம் 58அ வட்டக் கழகச் செயலாளர் பி.எம்.ராஜா தலைமையில் மா.ஜெயராம், (மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினர், கவுன்சிலர், மாமன்ற குழுத்தலைவர்) முன்னிலையில் நடைபெற்ற கழகத்தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் படிப்பகத்தை திறந்து வைத்தார். மாவட்டச் செயலாளர் கோ.தளபதி, கழகக் கொடியை பொன்.முத்துராமலிங்கம், வ.வேலுச்சாமி ஏற்றி வைத்தார். நிகழ்வில் சக்கரை பொங்கலை பி.டி.மணிமாறன், மண்டலத் தலைவர் பி.பாண்டிசெல்வி வழங்கினார்கள். உடன் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், மகளிரணி நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.




இராயபுரம் 48வது வார்டு சார்பில் தமிழர் திருநாள் பொங்கல் விழாவை முன்னிட்டு டி.எச்.ரோடு அன்னை மஹாலில் ரெயின்போ என். விஜயகுமார் ஏற்பாட்டில் வி.விஜயலஷ்மி எம்.சி. முன்னிலையில் வட்ட செயலாளர் இரா.பாலன் வரவேற்புரையில் சென்னை மாநகராட்சி 48வது வார்டு உட்பட தூய்மை பணியாளர்கள்,குடிநீர் வாரியம் ஊழியர்கள், அரசு பள்ளி ஆசிரியர்கள்,சாலை பணியாளர்கள், அங்கன்வாடி ஆசிரியர்கள்,கூட்டுறவு துறை ஊழியர்கள், அரசு மருத்துவமனை செவிலியர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் இராயபுரம் பகுதிகளில் உள்ள கழக முன்னோடிகள் என ஆயிரம் நபர்களுக்கு அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பினை சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா. வழங்கினார். உடன் இரா.நரேந்திரன், ஆர்.எம்.டி.ரவீந்திரன், இரா.கருணாநிதி, நேதாஜி யு.கணேசன் எம்.சி, மூ.கோபி, நாகம்மை கருப்பையா, வே.சிவகுமார், ந.சண்முகம், எஸ்.ரமேஷ், டி.கமலகண்ணன், பா. வேளாங்கன்னி எம்.சி,விமலா எம்.சி, 48 மற்றும் 48(அ) வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஈரோடு தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை சார்பில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் சித்தோடு சி.எஸ்.பிரகாஷ் ஏற்பாட்டில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்எல்டி.ப.சச்சிதானந்தம், வி.சி.சந்திரகுமார், மா.சு.ராதாகிருஷ்ணன், வீரமணி, மாவட்ட நிர்வாகிகள் கே.குமார்முருகேஸ், ஆ.செந்தில்குமார், செல்லப் பொன்னி, ப.க.பழனிசாமி, பொன்னுசாமி, கதிரம்பட்டி மகாலிங்கம், மாநகர மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், ஈரோடு இளையகோபால், இரா.சேகரன், வி.சி.நடராஜன், செங்கோட்டையன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர்கள் மகளிரணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சார்வாகர் கூறும் தேசியத்தின் உண்மைகளும், பொய்களும் - அறிஞர் பார்த்தா சாட்டர்ஜி அளித்துள்ள அபூர்வ நூல்!

**வ**ங்கத்தைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற சிந்தனையாளர், அறிஞர் பார்த்தா சாட்டர்ஜி. அரசியல் தத்துவப் பேராசிரியர். நியூயார்க்கிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நான் ஆய்வு படிப்பை மேற்கொண்டபோது என் ஆசிரியராக விளங்கியவர். இவருடைய நூல்கள் பலவும் பல்வேறு நாடுகளில் பயிலப்படும் தேசியம் குறித்த கோட்பாட்டு நூல்களாகும். குறிப்பாக இந்திய தேசியம் எப்படி உருப்பெற்றது, அது முழுமையானதா, அந்த தேசிய சிந்தனையில் உள்ள குறைபாடுகள் என்னவென்பதை பல்வேறு நூல்களில் திறம்பட விவாதித்துள்ளவர்.





பார்த்தா சாட்டர்ஜி இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலத்தில் ஒரு அபூர்வமான நூலை வெளியிட்டார். அதன் தலைப்பு: Truth and Lies of Nationalism - as told by Carvak என்பதாகும். நாடு கோவிட் பெருந்தொற்று காலத்தில் பாதிக்கப்பட்டிருந்தபோது அவர் வீட்டு வாயிலில் ஒரு பெட்டி வைக்கப்பட்டிருந்ததாகவும், அதில் அவர் விலாசம் இடப்பட்டிருந்ததாகவும் அதனுள் ஒரு கையெழுத்துப்படி இருந்த தாகவும் கூறுகிறார். அந்த கையெழுத்துப்படிதான் சார்வாகர் என்று தன்னை கூறிக்கொள்ளும் ஒருவர் அவரே பேசுவது போல எழுதிய இந்த இந்திய தேசியம் குறித்த நூலாகும்.

பார்த்தா சாட்டர்ஜி அந்த கையெழுத்துப் படியை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து, குறிப்புகள் சேர்த்து நூலாக வெளியிட்டார். அந்த நூல் அனைத்து மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும்படி இந்திய தேசிய உருவாக்கத்தின் பல்வேறு அம்சங்களை விவாதிப்பதாக விளங்குகிறது. அதை நானும், நண்பர் அசோகா பல்கலைக்கழக பேராசிரியர் ரவீந்திரன் ஸ்ரீராமச்சந்திரனும் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளோம். இப்போது நடைபெறும் சென்னை புத்தகக் காட்சியில் இந்த நூல் எதிர் வெளியீட்டின் அரங்கில் கிடைக்கிறது.

இந்த நூலைக்குறித்து நான் இங்கே எழுத காரணம் இன்றைய நிலையில் இந்திய தேசியம் சந்திக்கும் முக்கிய பிரச்சினைகளையெல்லாம் இந்த நூல் சிறப்பாக விவாதிக்கிறது என்பதுதான். அதனால் நாட்டின் அரசியலில் அக்கறை கொண்டோர் அனைவரும் படித்துப் பார்ப்பது பயன்தரும்.

### தொன்மையும், பன்மையும்

இந்த நூலின் தொடக்கமே தெளிவுபடுத்தும் ஒரு விஷயம் என்னவென்றால் இன்று உலகிலுள்ள எல்லா தேசங்களுமே நவீனமானவை என்பவைதான். தொன்மையான தேசம், பண்டைய தேசம் என்று எதுவும் கிடையாது. இந்தியக் குடியரசு 1950ஆம் ஆண்டு உருவானபோதுதான் இன்றைய இந்தியா என்பது அதிகாரபூர்வமாக பிறந்தது. அதற்கு முன் எந்தக்காலத்திலும் இந்த நிலப்பரப்பு ஒரே அரசியல் அமைப்பு கொண்டதாக இருந்ததில்லை. ஒரே பேரரசின் கீழ் கூட இருந்ததில்லை.




இப்படிச் சொல்லும்போது நாம் தேசத்திற்கு எதிரானவர்கள் இல்லை. உண்மையான தேசபக்தி என்பது உண்மைகளைப் பேசுவதுதானே தவிர கற்பிதங்களை பேசுவதல்ல. இப்போது ஒருவர் கேட்கலாம்; ஒரே நாடாக இருக்காவிட்டால் என்ன, இந்திய நிலப்பரப்பு முழுவதிலும் ஒரு பண்பாட்டுத் தொடர்ச்சி இருந்ததாகக் கருதலாமே என்று கேட்கலாம். அதையும் இந்த நூல் விரிவாக விவாதிக்கிறது. இந்தியாவின் பண்பாடுகள் அளப்பரிய பன்மை கொண்டவை என்பதை சுட்டிக்காட்டுகிறது.

**இந்தியாவுக்கு ஒற்றை பண்பாட்டு அடையாளத்தைக் கற்பிக்க முடியாது; அந்த பண்பாடு தொன்றுதொட்டு மாற்றங்களில்லாமல் தொடர்ந்து வருவதாகக் கூற முடியாது. பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்ட பல்வேறு பண்பாடுகளின் தொகுப்புதான் இந்தியா என்பதை ஏராளமான தரவுகளுடன் எடுத்துரைக்கிறார் சார்வாகர்.**

### எல்லைகளும், தொல்லைகளும்!

தேசத்தின் எல்லைகளைக் காக்கும் ராணுவ வீரர்களைப் பற்றியெல்லாம் மிகவும் உணர்ச்சிகரமான சொல்லாடல்களுக்கு நாம் பழக்கப்பட்டிருப்போம். நாட்டின் பாதுகாப்பு என்பது முக்கியம்தான். ஆனால் நாட்டின் எல்லைகள் என்பவை கடவுளால் உருவாக்கப்பட்ட புனிதமான கோடுகள் அல்ல. அது பல்வேறு அதிகாரிகள், இந்தியாவைப் பொறுத்தவரை பல்வேறு பிரிட்டிஷ் அதிகாரிகள் பலவிதமான சந்தர்ப்பங்களில் வகுத்த எல்லைகள்தான்.

சதாத் ஹசன் மண்டோ என்ற எழுத்தாளரின் புகழ்பெற்ற டோபா தேக் சிங் என்ற கதையை வாசித்திருப்பீர்கள். எல்லைக்கோட்டினை வரைவதன் அபத்தமான தற்குறித்தன்மையை அவல நகைச்சுவையாக வெளிப்படுத்தும் புகழ்பெற்ற கதை அது. எல்லா திசைகளிலும் இந்தியாவின் எல்லைகள் எப்படியெல்லாம் தீர்மானிக்கப்பட்டன என்பதை இந்த நூலில் விரிவாக விளக்குகிறார் சார்வாகர்.

**எல்லைகள் வகுத்ததில் உருவான தொல்லைகள் பல வகைப்பட்டவை. ஒரு சில பிரச்சினைகள் காலப்போக்கில் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட்டன. சில பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் புகைந்து கொண்டு உள்ளன. எந்தெந்த பகுதிகள் இந்தியாவுடன் இணைய வேண்டும், எவை இணைய வேண்டாம் என்பதெல்லாமே எந்த அடிப்படைகளில் முடிவு செய்யப்பட்டன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.**

ராஜன் குறை கிருஷ்ணன்
பேராசிரியர்
அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.




மேலும் இந்தியாவும், பாகிஸ்தானும் இரண்டு நாடுகளாக பிரிந்து சுதந்திரம் பெற்றபோது நூற்றுக்கணக்கான தன்னாட்சி உரிமையுள்ள சமஸ்தானங்கள் இருந்தன. அவை தனித்திருப்பதா, இந்தியாவுடன் இணைவதா என்பது ஒரு கேள்வி. ஒரு சில சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைவதா, பாகிஸ்தானுடன் இணைவதா என்பது மற்றொரு கேள்வி. இதில் முடிவுகள் எட்டப்பட்ட விதம் ஒருபடித்தானவை அல்ல. காஷ்மீர் சமஸ்தானத்தின் பிரச்சினை இன்றளவும் புகைந்துகொண்டுதான் இருக்கிறது. உலகிலேயே ஏராளமாக ராணுவும் குவிக்கப்ப ட்டுள்ள பகுதிகளில் ஒன்று காஷ்மீர் எனப்படுகிறது.

**இதையெல்லாம் இந்த நூல் விரிவாகப் பேசக் காரணம், இந்தியா எப்படி வரலாற்றுப் போக்கில் கட்டமைக்கப்பட்ட தேசம் என்பதை விளக்குவ தற்குத்தான். வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் ஆகிய எவற்றையும் காட்டி இன்றைய இந்திய தேசத்தின் உருவாக்கத்தை விளக்க முடியாது. இது ஒரு நவீன அரசியல் ஏற்பாடு. அது அனைத்து மக்களுக்கும் நன்மை புரியும் ஏற்பாடாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம்.**

### தேசம் என்பது அரசா, மக்களா?

பார்த்தா சாட்டர்ஜி அவரது பல்வேறு நூல்களிலும், கட்டுரைகளிலும், எழுப்பிய முக்கியமான கேள்வி தேசம் என்பது அரசா, மக்களா என்பதுதான். தேசிய அரசா அல்லது மக்களின் தேசமா என்று கேட்கிறார் அவர். இந்தக் கேள்வியை நாம் பொறுமையாகவும், நிதானமாகவும் புரிந்துகொள்ள வேண்டும்.

பண்டைய வரலாற்றில் அரசர்களே இறையாண்மையின் வடிவமாக இருந்தார்கள். ஓர் அரசர் எந்தெந்த பகுதிகளை அவர் கட்டுப்பாட்டில் கொண்டு வருகிறாரோ அது அவருடைய நாடு. சோழ மன்னர் தர்மபுரி பகுதியை கைப்பற்றினால் அது அவருடைய ஆட்சிக்கு உட்பட்டது. அதை ராஷ்டிரகூடர்கள் கைப்பற்றினால் அது அவர்களுக்கு உரியதாகிவிடும். அதிகாரம் மன்னர்கள், மந்திரிகள், தளபதிகள், மதகுருமார்கள், நிலப்பிரபுக்கள் என்று வடிவம் பெற்று இருந்தது.




நவீன அரசியலில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம் மக்களாட்சி என்பதுதான். அது என்னவென்றால் இறையாண்மை அனைத்து மக்களுக்கும் உரியது என்ற கருத்தாக்கம். அப்படியென்றால் அனைத்து மக்களும் தங்களைத் தாங்களே ஆட்சி செய்து கொள்ள வேண்டும். அப்படி செய்வதற்காக மக்கள் உள்ளூரில், தல மட்டத்தில் தொடங்கி தங்கள் பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். உள்ளூர் நிர்வாகம், மாநில நிர்வாகம், தேசிய அளவில் ஒன்றிய அரசின் நிர்வாகம் எல்லாமே மக்களின் பிரதிநிதிகளால் வழி நடத்தப்படும். அதற்கான அரசியலமைப்பு சட்டம் இயற்றப்படும்.

அதனால்தான் இந்தியாவிலிருந்த ஐந்நூறுக்கும் மேற்பட்ட மன்னர்களெல்லாம் குடியரசில் இணைய நேர்ந்தது. சிறிது காலம் அவர்களுக்கு இழப்பீடாக மன்னர் மானியம் தரப்பட்டது. ஆனால் 1971ஆம் ஆண்டு இந்திரா காந்தி அந்த இழப்பீடு தருவதை ஒழித்துவிட்டார். மன்னர் மானிய ஒழிப்பு என்று அறியப்பட்ட முற்போக்கு நிகழ்வு இது.

ஆனால் இப்போதும் என்ன ஒரு வேறுபாடு என்றால், மக்களிடையே பணபலமும், சமூக செல்வாக்கும் பெற்ற சிலர் அரசினை கட்டுப்படுத்துவதில் அதிக ஆற்றலுடன் இருக்கி றார்கள். இடதுசாரிகள் இதை ஆளும் வர்க்கம் என்று அழைப்பார்கள். எளிய மக்கள் அரசால் ஆளப்படுபவர்களாக இருக்கிறார்கள். அரசியல்வாதிகள் எளிய மக்களிலிருந்து உருவாகி அவர்களுக்காக செயல்பட்டா லும், அரசினை கட்டுப்படுத்தும் அதிகாரம் படைத்ததாக ஆளும் வர்க்கம், பெரு முதலீட்டி யம் விளங்கி வருகிறது.



பெருமுதலீட்டியத்தின் நலன்களுக்கும், வெகுமக்களின் நலன்களுக்கும் முரண்பாடு உள்ளது. அதனால்தான் இந்தியா உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வு அதிகரித்து வருகிறது. தோராயமாகச் சொன்னால் சொத்துகளை வைத்திருப்பதிலும் சரி, வருமானத்திலும் சரி 10% பேரே 50% சொத்துகளும், வருமானமும் உள்ளவர்களாக இருக்கிறார்கள். மீதமுள்ள 90% மக்கள் மீதமுள்ள 50%ஐ பங்கு போட்டுக்கொள்கிறார்கள் எனலாம்.

அரசிடமுள்ள அதிகாரம் முதலீட்டியத்தின் நலனுக்காக செயல்படுகிறதா, மக்களின் நலனுக்காக செயல்படுகிறதா என்பதே கேள்வி. அரசியல் கட்சிகளிடையே நிகழும் தேர்தல் மோதல்கள் அவர்களை மக்களுக்காக சில நலத்திட்டங்களை செய்ய நிர்பந்திக்கின்றன. ஆனால் முதலீட்டிய நலனை அனுசரிக்காவிட்டால் அவர்களால் நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியாது. இதுதான் வலதுசாரி, இடதுசாரி என்ற பிரிவாக அரசியலில் விளங்குகிறது.

ஒரு திரைப்படப் பாடல் உங்களுக்கு நினைவிருக்கும்.

**நாடென்ன செய்தது உனக்கு**
**என்று நீயும் கேட்பது எதற்கு**
**நீயென்ன செய்தாய் அதற்கு**
**என்று கேட்டால் நன்மை உனக்கு...**

இந்தப் பாடலின் நோக்கம் எல்லோரும் சுயநலத்துடன் வாழக் கூடாது, பொது நன்மை கருதி வாழ வேண்டும் என்பதாகும். ஆனால் இப்படிக் கூறுப வர்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமூக ஏற்றத் தாழ்வு ஆகியவற்றை நீக்குவதில் முன்னிற்கா விட்டால் நாட்டுக்காக வாழ்வது என்பது அரசுக்காக வாழ்வது, அல்லது ஆளும் வர்க்கத்துக்காக வாழ்வது என்றாகி விடும்.

### ஒன்றியத்தில் குவியும் அதிகாரமும், மாநில சுயாட்சியும்

**மக்களிடம் அதிகாரம் பரவலாக சென்றடைய வேண்டும் என்பதற்கான முதல் படி ஒன்றிய அரசிடம் குவிந்துள்ள அதிகாரம் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதாகும். இந்த நூல் அதைத் தெளிவாக வலியுறுத்துகிறது. ஒன்றிய அரசின் அதிகாரத்தின் பின்னால் பெருமுதலீட்டிய சக்திகள் அணிவகுத்து நிற்கின்றன.**

மக்களின் அரசியல் வெளிப்பாட்டுக்கு மாநில அரசியலே முக்கியமான களம் அமைத்துத் தருகிறது. முதலில் மாநில அரசியல் வெகுமக்களின் மொழியில் அமைந்துள்ளது. இரண்டாவது அவர்களின் அவசியத்தேவைகளான கல்வி, சுகாதாரம், சட்டம் ஒழுங்கு ஆகியவை மாநில அரசின் பொறுப்பில் உள்ளன. எனவேதான் மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம், அதிக நிதிப்பங்கீடு என்பது மக்களுக்கு அதிக அதிகாரம் என்பதாகவே பொருள்படும். ஒன்றிய அரசிடம் அதிகாரத்தை குவிப்ப தென்பது மக்களை மேலும் அந்நியப்படுத்துவதாகும்.

அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் இன்றைய இந்துத்துவ அரசியல் என்பது இந்தியாவின் தொன்மையைப் பேசி ஒற்றை இந்துத்துவ அடையாளத்தை உருவாக்குவது, ஒன்றிய அரசில் அதிகாரத்தைக் குவிப்பது, பெரு முதலீட்டிய ஆதரவு என்று செயல்படுவதைப் பார்க்கலாம்.

சார்வாகரின் நூல் எட்டு இயல்களில் இந்தப் போக்கினை விரிவாகச் சுட்டிக்காட்டி விளக்குவதுடன், இளைஞர்கள் விழிப்புணர்வுடன் மக்களை மேம்பட்ட வாழ்வினை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் கோருகிறது.

அனைவரும் எளிதில் வாசித்து புரிந்து கொள்ளும் படி ஏராளமான தரவுகளுடன் எழுதப்பட்டுள்ள இந்த நூல் பலருக்கும் அரசியலில் பல தெளிவுகளைத் தரும் என்றே நம்புகிறேன். அதன் பொருட்டே அதைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளோம்.

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்



சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்குப் பகுதியில், 58(அ) வட்டக் கழகச் செயலாளர் ஆர்.பாபு (எ) சந்திரசேகரன் ஏற்பாட்டில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்துகொண்டு, 300 நபர்களுக்கு இனிப்பு பொங்கல் மற்றும் உணவு வழங்கினார். இதில் பகுதிச் செயலாளர் வி.சுதாகர், கே.எஸ்.எம்.நாதன், இராஜேஷ்வரி ஸ்ரீதர், எஸ். ரசூல், டி.வி.வேலு, எம்.மலர் மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், ராஜதுரை, ஸ்ரீதர், க.விஜயன், இரவிச்சந்திரன், சரளா, பன்னீர் செல்வம், வி.தட்சணாமூர்த்தி, பி.கே.கிருஷ்ணமூர்த்தி, சா.குமார், கோ.ரவி, ல.முரளி மகளிர் அணியினர், சின்னப் பொன்னு, லீலாவதி, கற்பகம் மற்றும் இனியன், ஜி.ராஜேந்திரன், இரயில்வே ரவி, துரை, பிரேம், ஜனார்த்தனன், கோபாலகிருஷ்ணன், த.நவீன்குமார் ஏ.ஷேக்பரீத் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்ட முரசொலி நிருபர்

## இரா.அண்ணாதுரை இல்ல விழா!

ஆவடி சா.மு.நாசர் - திருத்தணி எஸ்.சந்திரன் - விஜி.ராஜேந்திரன் - ஆ.கிருஷ்ணசாமி பங்கேற்பு!

*திருவள்ளூர் ஜன 18;*

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் பத்தியால்பேட்டையில் வசிக்கும் முரசொலி செய்தியாளர் இரா.அண்ணாதுரை அ.ஜீவா ஆகியோரின் பேரக்குழந்தை அ.மகேஷ் ம.வினோதினி ஆகியோர் மகளின் முதல் பிறந்தநாள் விழா 20-01-2024 சனிக்கிழமை அன்று மதியம் 12 மணியளவில் திருவள்ளூர் அடுத்த காக்களூர் பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் எஸ்.வி.எஸ்.மஹால் நடைபெறுகிறது.

இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர், திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் விஜி.ராஜேந்திரன், பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திருத்தணி எம்.பூபதி, நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் பிரேம் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு 21ஆம் தேதி அன்று நடைபெற உள்ள மாநாட்டில் பங்கேற்பது குறித்து சிறப்புரையாற்றி பங்கேற்கும் இளைஞர்களுக்கு சீருடைகள் வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், ஆவடி மேயர் உதயகுமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமாமகேஸ்வரன், அக்னி மாசெ.ராஜேஷ், டி.பிரியா குமார், ஒன்றிய நிர்வாகிகள் ஜெயராமன், ஞா.ரமேஷ், மகேஸ்வரி பால விநாயகம், குட்டி, இ.என்.சேகர், ஆர்.திலீப் ராஜ், இம்மானுவேல், கருணாகரன், குமரேசன், ராமானுஜம், அன்பு உள்பட பலர் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே. சேகர்பாபு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., கோ.ஏகப்பன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, எம்.விஜயகுமார் மற்றும் பரிதி இளம்சுருதி, எம்.பி.எம்.ஷேக் அப்துல்லா, தேவஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராஜன், பகுதிச் செயலாளர்கள், முன்னணியினர் உடன் உள்ளனர்.

### சென்னை கிழக்கு மாவட்ட

# கழக நிர்வாகிகள், பகுதிக் கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

சென்னை, ஜன. 18 -

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று (17.01.2024) ஒட்டேரி, எம்.கே.டி மஹாலில், அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே. சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ஜோசப் சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, எம். விஜயகுமார் மற்றும் பரிதி இளம்சுருதி, எம்.பி.எம். ஷேக் அப்துல்லா, மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராஜன், பகுதிக் கழக செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, கூ.பி. ஜெயின், வே.வாசு, ஐ.சி. எப்.வ. முரளிதரன், எ.நாகராசன், ராஜகோபால், நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, தேர்தல் பொறுப்பாளர்கள்:, கௌதமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், பி.உதய சங்கர், வி. ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி.பூர்ணிமா, பி.ஜே.துளசிங்கம், அ.நிர்மலா தேவி, எம். இப்ராஹிம்கனி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: டி.லோகேஷ், பாலமுருகன், ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜே.பிரபு, ஆர்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, மோகன், எம்.பிரோஸ்கான், துரைக் கண்ணன், மா.அசோக் குமார், கு.கிருஷ்ண மூர்த்தி, ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப்குமார், ஆர்.எஸ்.சித்திக், எல்.சம்பத்குமார், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி. வி.நாகவள்ளி பிரபாகரன் மற்றும் வட்டகழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதிகழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். வட்டச் செயலாளர் மா.ருத்ர மூர்த்தி நன்றி கூறினார்.

வரலாறு காணாத பேரிடரில் குறிப்பாக சென்னை, தூத்துக்குடி மாவட்டங்களை சுற்றியுள்ள பகுதிகளில் 50 சென்டிமீட்டர், 90 சென்டிமீட்டர் அளவு பெய்த மழை வெள்ளத்தில் மக்களை காத்தும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூபாய் 6 ஆயிரம் நிதி வழங்கியும் இக்கடுமையான நிதி நெருக்கடி நிலவிய சூழலில்" தைத் திங்கள் முதல் நாளை தமிழர் திருநாளாக" மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என்பதற்காக பொங்கல் பரிசுடன் ரூபாய் 1000 ரொக்கமாகவும், மகளிர் உரிமைத் தொகை ரூபாய் 1000த்தை ஜனவரி 10ஆம் தேதியே அவரவர் வங்கி கணக்கில் வரவு வைத்து பொங்கலின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது

**தீர்மானம் 2:**

தமிழர் திருநாளை "சமத்துவ பொங்கல்" என்று பெயரிட்டு எழுச்சியுடன் கொண்டாட கழக உடன்பிறப்புகளுக்கும் மக்களுக்கும் பொங்கல் பரிசுகளை வழங்கிடுங்கள் என்று சொல்லி அதன் முன்னேடுப்பாக.. தான் சார்ந்த கொளத்தூர் தொகுதியில் கழக உடன் பிறப்புகளுக்கு பொங்கல் பரிசு வழங்கி மகிழ்ந்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சரையும்.. அதனை தொடர்ந்து சென்னை கிழக்கு மாவட்டம் முழுவதும் கழக உடன் பிறப்புகளுக்கும், பொதுமக்களுக்கும் பொங்கல் பரிசுகளை வழங்கி மகிழ்ந்த அனைத்து நிர்வாகிகளையும் வாழ்த்தி பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம் 3:**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் 19-01-24 வெள்ளிக்கிழமை, மாலை, நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெறும் கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகளை துவக்கி வைக்க வருகை தரும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், ஒன்றியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்களுக்கும் எழுச்சிமிகு வரவேற்பு அளித்திட உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம் 4:**

மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் பெய்த அதி கனமழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டு 21.1.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று சேலத்தில் நடைபெறும் கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில் இளைஞர் அணியோடு கழகத் தோழர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு அம்மா நாட்டில் எழுப்புகின்ற உரிமை மீட்பு முழக்கத்தை டெல்லி வரை பிரதிபலிக்க உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம்நிறைவேற்றியது.



ஆர்.கே. நகரில் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபிநேசர் ஏற்பாட்டில் 3,500 நபர்களுக்கு 5 கிலோ அரிசி, பொங்கல் பொருட்கள், சர்க்கரைப் பொங்கல், மஞ்சள் குருத்து, செங்கரும்பு, போர்வை உள்ளிட்ட பொங்கல் தொகுப்பை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வழங்கினார். சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், குமாரி நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் நேதாஜி யு.கணேசன், இர.பொன். இளவரசன், கி.இரவிக்குமார், லயோலா மதன், கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, ஏ.டி.மணி, என்.மருதுகணேஷ், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### ராகுல் காந்தி நடைபயணம்

# 'இந்தியா' கூட்டணிக்கு ஊக்கச் சக்தியாக மாறும்!

## 'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 18 -

ராகுல் காந்தியின் 2வது கட்ட நடைபயணம் இந்தியா கூட்டணிக்கு ஊக்கச் சக்தியாக மாறும் என்று 'தினகரன்' நாளேடு நேற்றைய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து தினகரன் தலையங்கம் வருமாறு:-



தினகரன்
ஜனவரி 17, 2024 புதன்கிழமை

ராகுல் யாத்திரை

மீண்டும் ஒரு யாத்திரையை தொடங்கி இருக்கிறார் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி. முதல் யாத்திரை கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை தொடர்ந்தது. அந்த யாத்திரை பெயர் இந்திய ஒற்றுமை யாத்திரை. இப்போது ராகுல் தொடங்கியிருக்கும் யாத்திரை பெயர் இந்திய ஒற்றுமை நீதி யாத்திரை. கடந்த ஆண்டு மே மாதம் 3ம் தேதி முதல் கலவரத்தால் சிக்குண்டு கிடக்கும் மணிப்பூர் மாநிலத்தில் இருந்து ராகுல் தொடங்கியிருக்கும் இந்த யாத்திரை மார்ச் 20 அல்லது 21ம் தேதி மும்பையில் முடியும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

ராகுல் கன்னியாகுமரியில் தொடங்கிய யாத்திரை 2022 செப்டம்பர் 7 முதல் 2023 ஜனவரி வரை 136 நாட்கள் நடந்தது. தமிழ்நாட்டில் 4 நாட்கள், கேரளாவில் 18, கர்நாடகாவில் 21, ஆந்திராவில் 4, தெலங்கானாவில் 12, மத்தியபிரதேசத்தில் 16, ராஜஸ்தானில் 18, அரியானாவில் 12, டெல்லியில் 2, உபியில் 5, பஞ்சாப்பில் 11, இமாச்சலில் 1, ஜம்மு காஷ்மீரில் 11 நாட்கள் நடந்தது. 14 மாநிலங்கள் வழியாக பயணம் மேற்கொண்ட ராகுல் கிட்டத்தட்ட 4,080 கிமீ தொலைவை நடந்தே கடந்து இருந்தார். அந்த நடைபயணத்தின் முடிவால் கர்நாடகா, இமாச்சல், தெலங்கானாவில்

மீண்டும் ஒரு யாத்திரையை தொடங்கி இருக்கிறார் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி. முதல் யாத்திரை கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை தொடர்ந்தது. அந்த யாத்திரை பெயர் இந்திய ஒற்றுமை யாத்திரை. இப்போது ராகுல் தொடங்கியிருக்கும் யாத்திரை பெயர் இந்திய ஒற்றுமை நீதி யாத்திரை. கடந்த ஆண்டு மே மாதம் 3ம் தேதி முதல் கலவரத்தால் சிக்குண்டு கிடக்கும் மணிப்பூர் மாநிலத்தில் இருந்து ராகுல் தொடங்கியிருக்கும் இந்த யாத்திரை மார்ச் 20 அல்லது 21ம் தேதி மும்பையில் முடியும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

ராகுல் கன்னியாகுமரியில் தொடங்கிய யாத்திரை 2022 செப்டம்பர் 7 முதல் 2023 ஜனவரி வரை 136 நாட்கள் நடந்தது. தமிழ்நாட்டில் 4 நாட்கள், கேரளாவில் 18, கர்நாடகாவில் 21, ஆந்திராவில் 4, தெலங்கானாவில் 12, மத்தியபிரதேசத்தில் 16, ராஜஸ்தானில் 18, அரியானாவில் 12, டெல்லியில் 2, உபியில் 5, பஞ்சாப்பில் 11, இமாச்சலில் 1, ஜம்மு காஷ்மீரில் 11 நாட்கள் நடந்தது. 14 மாநிலங்கள் வழியாக பயணம் மேற்கொண்ட ராகுல் கிட்டத்தட்ட 4,080 கிமீ தொலைவை நடந்தே கடந்து இருந்தார்.

அந்த நடைபயணத்தின் முடிவால் கர்நாடகா, இமாச்சல், தெலங்கானாவில் காங்கிரஸ் ஆட்சி அமைக்க முடிந்தது. அதே சமயம் ராஜஸ்தானில் ஆட்சி பறிபோனது. மிகவும் நம்பிக்கையாக இருந்த மத்தியபிரதேசத்திலும் மீண்டும் தோற்றது. சட்டீஸ்கர் ஆட்சியும் கையை விட்டு போனது. இப்போது மணிப்பூரில் தொடங்கியிருக்கும் 2வது கட்ட ராகுலின் யாத்திரை நடைபயணம் மற்றும் பஸ் பயணமாகவும் அமைய உள்ளது. நாகாலாந்து, அசாம், அருணாச்சல், மேகாலயா, மேற்குவங்கம், பீகார், ஜார்க்கண்ட், ஒடிசா, சட்டீஸ்கர், உபி, மபி, ராஜஸ்தான், குஜராத் வழியாக இந்த பயணம் மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் முடிவடைய உள்ளது.

மொத்தம் 67 நாட்கள், 15 மாநிலங்கள், 6713 கிமீ தொலைவுக்கு நடைபயணமாகவும், பஸ் மூலமாகவும் ராகுல்காந்தி இந்த பயணத்தை மேற்கொண்டு வருகிறார். 100 மக்களவை தொகுதிகள் வழியாக இந்த பயணம் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக உபியில் அதிகபட்சமாக 11 நாட்களும், அசாம் மாநிலத்தில் 8 நாட்களும், மபியில் 7 நாட்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. நீதியாத்திரை என்று பெயர் வைக்கப்பட்டாலும், நிச்சயம் இந்த யாத்திரை வரவிருக்கும் மக்களவை தேர்தலை குறிவைத்து மேற்கொண்டு இருக்கும் பயணம் என்பது தெளிவானது.

பா.ஜவுக்கு மாற்றாக இந்தியா கூட்டணி உருவாகி இருக்கும் இந்த நேரத்தில் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை, வேட்பாளர் தேர்வு பணிகளுக்கு முன்பு ராகுல்காந்தி முதற்கட்ட பிரசாரமாக இந்த நீதி யாத்திரை மூலம் மக்களை சென்று சந்தித்து முடித்து இருப்பார். ஜன.22ம் தேதி நடக்கும் அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவை எப்படி பா.ஜ தேர்தல் அஸ்திரமாக பயன்படுத்தி வருகிறதோ அதே போல் ராகுல் மேற்கொண்டு இருக்கும் இந்த யாத்திரை நிச்சயம், காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமல்ல, இந்தியா கூட்டணிக்கு வடமாநிலங்களில் மிகப்பெரிய ஊக்க சக்தியாக மாறும்.

இவ்வாறு தினகரன் நாளேட்டின் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

### சென்னை மேற்கு மாவட்டக்

# கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (18-01-2024 மாலை 6 மணியவில்) மாவட்டக் கழக அலுவலகத்தில் (எண் .20/32, காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கம் , சென்னை-600 034) மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெறுகிறது .

இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாநில நிர்வகிகள், தலைமைச் செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் , துணை அமைப்பாளர்கள், மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** கழகத் தலைவர் அவர்கள் பங்கேற்கும் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் மற்றும் சேலத்தில் நடைபெறும் கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

### திருவள்ளுவர் திருநாள்

# திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு மலர் வணக்கம் நிகழ்ச்சி!

## தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்றது!

சென்னை, ஜன. 18 -

திருவள்ளுவர் திருநாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் அவரது சிலைக்கு மலர் வணக்கம் நிகழ்ச்சி நடை பெற்றது.

கடந்த 2055 ஆண்டுச் சிந்தனை வளத்திற்கு ஊற்றுக் கண்ணாக விளங்கி இனிவரும் நூற்றாண்டுகளின் சிந்தனைக் களத்திற்குத் தடம் அமைத்துத் தந்துள்ளது திருக்குறள்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட நம் தமிழ்நாடு அதனால்தான் திருக்குறள் உலகப்பொதுமறை எனப் போற்றப்படுகிறது. வள்ளுவத்தின் மாண்பு சொல்லிலடங்காது. இதன் சிறப்பு கருதியே இந்திய மொழிகளி லும், உலக மொழிகளிலும் திருக்குறளைத் தம்வயமாக்கிக் கொண்டுள்ளன.

வள்ளுவத்தில் கட்டுக் கடங்காத கற்பனை இல்லை; பொய்யும் புரட்டுமில்லை; மனிதன் வாழ் வாங்கு வாழ்வதற்குரிய வழிமுறைகளையே வள்ளுவர் வகுத்துரைக்கிறார்.

வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூல். உலகத்தின் எந்த மூலையில் உள்ள எவரும் பின்பற்ற தக்க கருத்துக் களஞ்சியம். ஆயிரக்கணக்கான வழிநூல்கள் தோன்ற இடம் தந்து, அள்ள அள்ளக் குறையாத பெட்டகமாய்த் திகழ்வது திருக்குறளின் தனிச்சிறப்பு.

விடுதலைக்கு முன்னரே தந்தை பெரியார் குறட்பாவைத் தமிழர்தம் அடையாளச் சின்னமாக எடுத்துக் காட்டினார். விடு தலைக்குப்பின்னர் பேரறிஞர் அண்ணா திருக்குறளைத் திருப்பணியாகவே கொண்டு எழுச்சியுறச் செய்தார். குறளோவியம் கண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொல்லிலும் கல்லிலும் திருவள்ளுவரை வடித்துக் காட்டித் திருவள்ளுவருக்கு என்றும் அழியாத சின்னத்தை உருவாக்கியதோடு தமிழகத்தின் தலைநகரில் கோட்டம் அமைத்துத் தமிழ் மக்களின் அன்புப் பெருக்கினை வெளிப்படுத்தினார்.

ஏனைய தமிழ் நூல்களிற் காணப்படாத சிறப்பியல்புகள் திருக்குறளுக்கு உண்டு. நூற்பயனாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைத் தெளிவாகக் கூறிய நூல்களுள் குறளுக்கு ஈடானது வேறு இல்லை.

அனைத்துத் தமிழர்களாலும் அறிந்து போற்றப்படுபவராகவும் தமிழர்களின் பண்பாட்டு செறிவின் அடையாளமாகவும் கருத்துக் கருவூலமாகவும் திகழும் திருவள்ளுவரின் உலகுக்குப் பாறைசாற்றும் வகையில் பெருமையினை தைத் திங்கள் இரண்டாம் நாளில் தமிழ்நாடு அரசின் சார்பாக ஆண்டுதோறும் திருவள்ளுவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படுகிறது.

இவ்வகையில் இவ்வாண்டு திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு தைத் திங்கள் இரண்டாம் நாளன்று (16.01.2024) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மலர் வணக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், சீர் பெருமக்கள், தமிழறிஞர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வாழ்க வள்ளுவர்! வளர்க குறள் நெறி !



தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாளை முன்னிட்டு சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்டக் கிளை அலுவலகத்தில் வட்டசெயலாளர் எல்,ஆரி தலைமையில் துணை மேயர் மு.மகேஷ்குமார் அனைவருக்கும் உணவு வழங்கினார். உடன் பகுதி துணைச் செயலாளர் மு.ஆரோக்கியம் உள்ளிட்ட வட்டகழகத்தினர் கலந்து கொண்டனர்.

### பெரம்பூர் தெற்குப் பகுதி

# 44வது வட்டக் கழகக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் த.ஆறுமுகம் அறிக்கை!

சென்னை, ஜன. 18-

பெரம்பூர் 44வது வட்டச் செயலாளர் த.ஆறுமுகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலத்தில் 21.01.2024 அன்று நடைபெற உள்ள திமுக இளைஞர் அணி மாநாட்டில், கழகத் தலைவர் - முதல்வர் அவர்களின் அழைப்பை ஏற்றும், கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வேண்டு கோளை ஏற்றும், பெரம்பூர் தெற்குப் பகுதி, 44 வது வட்டத்தை சார்ந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் இளைஞர் அணியினர் கலந்தாலோசனைக் கூட்டம் 18.01.2024 மாலை 7.00 மணிக்கு வட்டக்கழக அலுவலகத்தில் எனது (த.ஆறுமுகம்) தலைமையிலும், பகுதிச் செயலாளர் க. ஜெயராமன், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் வை. உகளதமன், பகுதி அமைப்பாளர் சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. மாநாட்டில் கலந்து கொள்ள உள்ள இளைஞர் அணியினர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



தமிழ் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளை முன்னிட்டு புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திருமதி சங்கீதா பாரதி ராஜன் ஏற்பாட்டில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். அரவிந்த் ரமேஷ் புத்தாடை மற்றும் பொங்கல் பரிசுகளை கழக மூத்த முன்னோடிகளுக்கு வழங்கினார். இதில் ஒன்றிய செயலாளர் ஜி. வெங்கடேசன், ஒன்றிய துணைச் செயலாளர் சமாதானம் நல்லமுத்து, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் திருமதி கல்பனா சுரேஷ், அரசு வழக்கறிஞர் மேகநாதன், துணைத் தலைவர் கே.வி.கார்த்திகேயன், வார்டு உறுப்பினர் கே.பாலாஜி, கிளைக் கழக செயலாளர்கள் என்.எல். பன்னீர்செல்வம், டி. சிகாமணி, பி.சந்திரன், சரவணன் மூர்த்தி, சார்லஸ், மற்றும் கழக மூத்த முன்னோடிகள், நிர்வாகிகள், இளைஞர் அணியினர், மகளிர் அணியினர் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் தித்திக்கும் பொங்கல் திருநாளை முன்னிட்டு தூய்மைப் பணியாளர்களுக்கு பொங்கல் தொகுப்பு, நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் வழங்கினார். இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் சி.தசரதன், குறிஞ்சி எஸ்.கணேசன், டி.ஏ.ராஜ்,சாந்தி பக்தன், எம்.வி.குமார், ஆர்.எஸ்.சம்பத்,கே. பிரபாவதி, ஆர்.குமரேசன், த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குறுத்து சி. முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், எஸ்.பாஸ்கர், ஒய்.ரஜினிநந்தி, டி.டி.எம்.பாபு, வி.பழனிவேல் ம.ஜெயராமன், பி.எஸ்.சைலஸ், கே.கார்த்திகேயன், ஆர்.டில்லிராஜ் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் உதகை அரசு தாவரவியல் பூங்கா சாலை முக்கோணம் வடிவுள்ள இடத்தில், 200 ஆண்டுகளுக்கு முன்பு உதகை நகரினை கண்டறிந்து கட்டமைத்த "ஜான் சல்லிவன் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் 16.01.2024 அன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, மாவட்ட ஊராட்சித் தலைவர் மு.பொன்தோஸ் உட்பட பலர் உள்ளனர்.

### 200 ஆண்டுகளுக்கு முன்

# ஊட்டி நகரைக் கண்டறிந்த ஜான் சல்லிவன் சிலைக்கு மாலை!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் அணிவித்தார்!

ஊட்டி, ஜன. 18 -

ஊட்டி நகரினை கண்டறிந்து கட்டமைத்த 'ஜான் சல்லிவன்': நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சிலைக்கு அமைச்சர் கா.ராமச்சந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

200 ஆண்டுகளுக்கு முன்பு ஊட்டி நகரினை கண்டறிந்து கட்டமைத்த ஜான் சல்லிவனின் திருவுருவ சிலைக்கு அன்னா ரின் நினைவு தினத்தை முன்னிட்டு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராம ச்சந்திரன் நேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்ட கலெக்டர் மு.அ ருணா முன்னிலை வகித்த நிகழ்ச்சியில் அமைச்சர் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டத்தில் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஊட்டி நகரினை கண்டறிந்து கட்டமைத்த ஜான் சல்லிவன் அவர்கள் ஜூன் 15 ஆம் நாள் இங்கிலாந்தின் தலைநகர் இலண்டனில் பிறந்தார். ஜான் சல்லிவன் அவர்கள் 1815 முதல் 1830 வரை கோயமுத்தூர் மாவட்ட ஆட்சிய ராக பணிபுரிந்துள்ளார். இவர்

இயற்கை சுற்றுச்சூழலில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். இவர் முயற்சியாலேயே ஊட்டி ஏரி உருவாக்கப்பட்டது. ஜான் சலீவன் 16.01.1855 அன்று இயற்கை எய்தினார்.

நீலகிரி மாவட்டத்தின் ஊட்டி நகரினை 200 ஆண்டு களுக்கு முன்பு கட்டமைத்த பெருமைக்குரிய ஜான் சல்லிவன் அவர்களை நினைவு கூரும் வகையில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா சாலையோரம் முக்கோண வடிவுள்ள இடத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு அடி உயரத்தில் மார் பளவு வெண்கல சிலை அமைக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சரால் 21.05.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. ஜான் சல்லிவன் அவர்களின் நினைவு நாளை நினைவு கூரும் வகையில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது என்றார். முன்னதாக, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஊட்டி தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், மாவட்ட ஊராட்சி தலைவரின்; பயன்பாட்டிற் காக ரூ.18 இலட்சம் மதிப்பில் புதிய வாகனத்தின் சாவியை வழங்கி, கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட ஊராட்சித்தலைவர் மு.பொன்தோஸ், நகர் மன்ற துணை தலைவர் திரு.ரவிக்குமார், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ், வட்டாட்சியர் சரவணகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மாதவரம் விநாயகபுரம் 30–'அ' வட்டத்தில் திருவள்ளுவர் நாளை முன்னிட்டு திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து பொங்கல் வைத்து சுமார் 650 பயனாளிகளுக்கு நல உதவிகளை மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம் வழங்கினார். இதில் பகுதி கழக செயலாளர் ஜி. துக்காராம், மாமன்ற உறுப்பினர்கள் திருமலை, ஜி.துரைசாமி, புத்தகரம் ஏழுமலை, எம். சரவணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் எஸ்.ஏ.சீனிவாசன், லட்சுமி காந்தன், சே.கஜபதி, எஸ். சத்தியமூர்த்தி, எம்.செல்வம், இ.ராமன், கே.நரேந்திரன், எஸ்.என். கோதண்டன், எஸ்.என்.ராஜு, பி.எஸ்.என்.எல். தயாளன், எம்.சீனி வாசன், ஏ.வி.முருகன், என். சுரேஷ், பி.எஸ்.என்.எல். குமார், வி.பாஸ்கர், உமா மகேஸ்வரி, ஹைரா பானு, கௌதம் பாலாஜி, செண்பகராஜ், ஹரிப்பிரஹாம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். வட்டக் கழக செய லாளர் டி. சுந்தரம் ஏற்பாட்டில் சுமார் 650 பேருக்கு கரும்பு, புடவை, 5 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

### தமிழர் திருநாள்களான பொங்கல் - தமிழ்ப்புத்தாண்டு, திருவள்ளுவர் நாளை முன்னிட்டு

# இலண்டன் SOAS பல்கலைக் கழக வளாகத்தில் திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை!

## பூச்சி எஸ்.முருகன் மலர் மாலை அணிவித்து சிறப்புரை!

சென்னை, ஜன.18-

தமிழர் திருநாள்களான பொங்கல் - தமிழ்ப் புத்தாண்டு, திருவள்ளுவர் நாளை முன்னிட்டு லண்டன் SOAS பல்கலைகழக வளாகத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு கழக தலைமை நிலையச் செயலாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவருமான பூச்சி எஸ்.முருகன் மலர் மாலை அணிவித்து மரியாதை செய்து வணங்கினார்.

அதனை தொடர்ந்து பூச்சி எஸ்.முருகன் பேசியதாவது:

திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல் என் மூச்சினில் கலந்த முத்தமிழ் அறிஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா நடக்கும் வேளையில் இங்கிலாந்து நாட்டில் பொங்கல் விழா மற்றும் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதில் பெருமை அடைகிறேன்.

திருவள்ளுவரையும் கலைஞரையும் பிரித்து பார்க்க முடியாது. தமிழ் இருக்கும் வரை திருக்குறள் இருக்கும். திருக்குறள் இருக்கும் வரை கலைஞரின் புகழ் இருக்கும்.

கலைஞர் அவர்கள் தமிழினத்தின் அடையாளமாய் திகழ்கிறது திருக்குறள் என்றார். அந்த திருக்குறளின் குரலாய் திகழ்ந்தார். 80 ஆண்டுகளுக்கு மேலாக எழுத்தோடு பயணித்த கலைஞர் அவர்கள் பெரும்பாலும் பேசியதும் எழுதியதும் திருக்கு றளை பற்றியே வாழ்ந்ததும் திருக்குறளின் அடிப்படையிலேயே.

திருக்குறளுக்கும் கலைஞருக்கும் உள்ள தொடர்பு, அவரது 14 வயதிலேயே ஆரம்பமாகிவிட்டது. 1948ல் திருக்குறள் மாநாட்டை முன்னின்று நடத்திய பெரியார், அதே மாநாட்டில் தாளமுத்து - நடராஜனின் ஆகியோரின் சிலையை பட்டுக்கோட்டை அழகிரியைக் கொண்டு திறக்க வைத்தார். அந்நிகழ்ச்சிதான் திருக்குறள் மீது கலைஞர் அவர்களுக்கு தனிப்பிரியம் உருவாக காரணமாகியது.

1953 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கைதாகி திருச்சி சிறையில் அடைக்கப்படுகிறார். சிறையில் இருந்தவர் அங்குள்ள சிறைக் கைதிகளுக்கு வள்ளுவரைப் பற்றி பாடம் நடத்தியதோடு அங்கு திருக்குறள் மன்றம் ஒன்றையும் ஆரம்பித்து நடத்தினார். 1963 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் வள்ளுவரின் படத்தை வைக்க வேண்டுமென்று குரல் கொடுத்ததன் விளைவாக 1964 ம் ஆண்டு அப்போதைய குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன் தமிழ்நாடு சட்டசபையில் வள்ளுவரின் படத்தை திறந்து வைக்கிறார். 1966ல் கலைஞரின் முயற்சியால் மைலாப்பூரில் குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் திருவள்ளுவர் சிலையொன்றைத் திறந்து வைக்கிறார். பின்னர் அண்ணாவின் தலைமையில் ஆட்சியமைந்தபோது பொதுப்பணித்துறையோடு சேர்த்து போக்குவரத்து துறையையும் கவனித்துக் கொண்டிருந்த இவரது காலத்தில் தனியார் பேருந்துகள் அனைத்தும் அரசு மயமாக்கப் படுகிறது. அதோடு அனைத்துப் பேருந்துகளிலும் திருவள்ளுவர் படமும் திருக்குறளும் இடம்பெறச் செய்கிறார்.

பின்னர், 1956ல் தன்னுடைய 'முரசொலி' வார இதழில் முதல் முறையாக குறளோவியம் எழுதினார். அவர் தொடர்ந்து எழுதிய 354 திருக்குறள்களில் கலைஞரின் முதல் உரை அன்றுதான் எழுதப்பட்டது. அடுத்து வந்த பல ஆண்டுகளாக குறளோவியம் தீட்டிய கலைஞர், அந்தக் குறளோவியத்தை வடிவமைக்க சென்னையில் ஒரு வள்ளுவர் கோட்டத்தையும் அமைத்தார்.

**வள்ளுவர் கோட்டம்!**

வள்ளுவர் கோட்டத்தை திட்டமிட்டவர், கலைஞர். திருவாரூர் தேரை நினைவூட்டும் வகையில் வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டது. அடிக்கல் நாட்டிய நாள் முதல் அனைத்து ஏற்பாடுகளையும் அவரே முன்னின்று செய்தார். வள்ளுவர் கோட்டத்தைக் கட்டி முடித்து, திறப்பு விழா நடத்தும் நாளை எதிர்பார்த்திருந்த நேரத்தில்தான் கலைஞரின் ஆட்சி கலைக்கப்பட்டது.

முரசொலியில் தன்னுடைய வருத்தத்தை வெளிக்காட்டாமல், குறளோவியம் தீட்டப்பட்டது என்று பெருமையோடு வள்ளுவர் கோட்ட திறப்பு விழாவை உடன்பிறப்புகளுடன் பகிர்ந்து கொண்டார். பாசத்தோடு வளர்த்த மகளின் திருமணத்தை பார்த்து மகிழ நினைத்த நேரத்தில் மணப்பந்தலுக்குள் நுழைய முடியாமல் வெளியே நிற்க வேண்டிய சூழலில் இருப்பதாக உருக்கமாக எழுதியிருந்தார்.

வள்ளுவர் கோட்டம் திறக்கப்பட்ட பின்பும் தினமும் அவ்வழியேதான் முரசொலி அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தார். ஆனால், ஒரு நாளும் வள்ளுவர் கோட்டத்திற்குள் சென்றதில்லை.

13 ஆண்டுகள் கழித்து மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர்தான் வள்ளுவர் கோட்டத்தில் அடியெடுத்து வைத்தார்.

அய்யன் திருவள்ளுவரைப் பெருமைப்படுத்தும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 1970ம் ஆண்டு முதல் தைத்திங்கள் இரண்டாம் நாள் "திருவள்ளுவர் திருநாள்" எனவும், அதனை விடுமுறை நாளாகவும் அறிவித்து அரசாணை வெளியிட்டார்.

தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருவுருவ சிலைக்கு தைத் திங்கள் இரண்டாம் நாளான திருவள்ளுவர் தினத்தை மாலை அணிவித்தும், மலர் தூவியும் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

**குமரி முனை வள்ளுவர் சிலை!**

மூன்று கடல்கள் சந்திக்கும் இடமான குமரி முனையில் வள்ளுவர் சிலை அமைக்கவேண்டும் என்பது கலை ஞரின் நீண்டகால கனவு. நீண்ட நெடிய போராட்டத்திற்கு பின்னர் தான் அது சாத்தியமானது.

குமரிமுனையில் வள்ளுவர் சிலையை அடிக்கல் நாட்டியது, கலைஞர்தான். கையில் உளியெடுத்து அவரே செதுக்கித் தொடங்கிவைத்தார். நீண்ட போராட்டத்திற்கு பின்னர் 2000ம் ஆண்டின் முதல் நாளில் குமரி முனையில் வள்ளுவர் சிலை கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திருவள்ளுவர் சிலையை பற்றி கலைஞர் குறிப்பிடும்போது அலையும் வலையும் அசையலாம். நாம் கட்டியுள்ள சிலை அசையாது என்றார். சுனாமி பேரலையின்போதும் வள்ளுவர் சிலை அசையாமல் நின்றது.

திருக்குறளின் சிறப்பினை மாணவச் செல்வங்கள் அறிந்து கொள்ளும் வகையில், 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்யும் மாணவர்களை பாராட்டி குறள் பரிசு தொகை தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் தற்போது ரூ.10,000 குறள் பரிசுத்தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

சட்டசபையில் ஒரு நாள் முதல்வர் கலைஞரிடம் எதிர்கட்சியான காங்கிரஸ் கட்சியை சார்ந்த அனந்தநாயகி தி.மு.க. ஆட்சியில் பேருந்துகளில் திருவள்ளுவர் படங்களை வைத்து, திருக்குறள்க ளை எழுதியுள்ளீர்கள் அதில் நான் படித்த ஒரு குறள், 'யாகாவராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு', என்று இருந்தது. இது அந்த பேருந்தின் ஓட்டுநருக்கா அல்லது நடத்துநருக்கா அல்லது பயணிகளுக்கா?", என்றுக் கிண்டலாகக் கேட்க, கலைஞர் உடனடியாக எழுந்து, "அம்மையார் அனந்த நாயகி அவர்கள், 'யாகாவராயினும் நாகாக்க காவாக்கால் சோகப்பர் சொல்லிழுக்கப் பட்டு', என்ற திருக்குறள் யாருக்குப் பொருந்தும் என நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார். நாக்கு யாருக்கெல்லாம் இருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் அக்குறள் பொருந்தும்", என்று பதில் கூறுகிறார்.

கலைஞரையும் திரு வள்ளுவரையும் பிரித்துப் பார்க்க முடியாது. தமிழ் இருக்கும் வரை திருக்குறள் இருக்கும். திருக்குறள் இருக்கும் வரை கலைஞர் அவர்களின் புகழ் இருக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில் இந்திய தமிழர்கள் நலன்புரி சங்க தலைவர் ரவிச்சந்திரன் மற்றும் நிர்வாகிகள் கிருஷ்ணன், சதீஷ், விஜயராகவன், ஆனந்த்குமார், பல்கலைக்கழக தமிழ் இருக்கை குழுவின் நிர்வாகி சிவ சீலன், கழக அயலக அணி NRTIA லண்டன் நிர்வாகிகள் ராஜ்குமார், ராஜன், முருகன் இட்லி கடை உரிமையாளர் மனோகரன், வழக்கறிஞர் சிவ சூரியன் முருகன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந் நிகழ்வை NRTIA லண்டன் செந்தில் குமார் ஒருங்கிணைத்தார்.

### டி.சுந்தரம் ஏற்பாட்டில்! ஜி.துக்காராம் - திருமலை துரைசாமி பங்கேற்பு!

# மாதவரம் 30 (அ) வட்டத்தில் 650 பேருக்கு நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜன. 18-

மாதவரம் விநாயக புரம் 30 (அ) மாவட்டத்தில் திருவள்ளுவர் பிறந்த நாளை முன்னிட்டு திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து பொங்கல் வைத்து சுமார் 650 பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளை மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் சுதர்சனம் விழாவில் கலந்து கொண்டு வழங்கினார்.

இதில் பகுதி கழக செயலாளர் ஜி துக்காராம், மாமன்ற உறுப்பினர்கள் திருமலை, ஜி.துரைசாமி, புத்தகரம், ஏழுமலை, எம்.சரவணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் எஸ்.ஏ.சீனிவாசன், லட்சுமி, காந்தன், சே.கஜபதி, எஸ்.சத்தியமூர்த்தி, எம்.செல்வம், இ.ராமன், கே. நரேந்திரன், எஸ்.என்.கோதண்டன், எஸ்.என்.ராஜு, பி.எஸ்.என்.எல். தயாளன், எம்.சீனிவாசன், ஏ.வி.முருகன், என்.சுரேஷ், பி.எஸ். என்.எல்.குமார், வி.பாஸ்கர், உமா மகேஸ்வரி, ஹைரா பானு, கௌதம், பாலாஜி, செண்பகராஜ், ஹரிப்பிரஹாம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

வட்டச் செயலாளர் டி.சுந்தரம் ஏற்பாட்டில் சுமார் 650 பேருக்கு கரும்பு புடவை, ஐந்து கிலோ அரிசி போன்ற நல உதவிகள் ஏழை எளியவர் களுக்கு வழங்கப்பட்டது.



தமிழர் திருநாளை முன்னிட்டு 15.01.2024 அன்று திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. இதில் பொதுமக்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு பொங்கல் வைத்து கொண்டாடினர். உடன் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ச. சுப்பையா
### சனவரி 16 (1980)



**சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் 1971 மற்றும் 1977 ஆகிய இரண்டு முறை கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, கழகப் பணியாற்றியவர்.**

**சங்கரன்கோவில் நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**"எந்த நிலையிலும் நிலை குலையாத – நெருக்கடி காலத்திலும் (மிசா) நிலைமாறாத தம்பிதான் பண்பாளர் ச.சுப்பையா" என தலைவர் கலைஞர் அவர்கள், அவரது இரங்கல் கூட்டத்தில் குறிப்பிட்டார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் (15.1.2024) அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் அமைச்சர் பெருமக்கள் சந்தித்து பொங்கல் வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் (15.1.2024) அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் சந்தித்து பொங்கல் வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் 15.1.2024 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்கள் சந்தித்து பொங்கல் வாழ்த்துத் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை (15.1.2024) அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து பொங்கல் வாழ்த்துப் பெற்றார்.






பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்னையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் முன்னெடுப்பில் நடைபெற்று வரும் “சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா” நிகழ்ச்சியில் 1500 நாட்டுப்புற கலைஞர்கள் பங்கேற்று கலை நிகழ்ச்சிகளை நடத்திவரும் நிலையில், 16.01.2024 செவ்வாய்க்கிழமை – அன்று சென்னை சேப்பாக்கத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்தில் சென்னை சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள நாட்டுப்புற கலைஞர்களுடன் பொங்கல் விழா கொண்டாடி, அவர்களுக்கு இனிப்புகள் மற்றும் புத்தாடைகளை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வழங்கினார். உடன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் காந்தி, கலை பண்பாட்டுத்துறை இணை இயக்குநர் சிவசௌந்திரவல்லி, கலை பண்பாட்டுத்துறை துணை இயக்குநர் ஹேமநாதன், மக்கள் தொடர்பு அலுவலர்கள் பதி, பிரைட் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




அய்யன் திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் மாநில மனித உரிமை ஆணையம்.

# இடம் பொருள் கலைஞர் 53



# மாநில மனித உரிமைகள் ஆணையம்

## மக்களின் உரிமை காத்த முன்னெடுப்பு!

சுவாமி ஆனந்த தீர்த்தர் என்ற காந்தியவாதி ஒருவர் இருந்தார். கேரளத்தைப் பூர்வீகமாகக் கொண்ட அவர், தமிழ்நாட்டில் சாதி வன்கொடுமைகளுக்கு எதிராகப் போராடினார். அவர், 'அகில இந்திய அரிஜன சேவா சங்க' மண்டல அதிகாரியாக இருந்தபோது, மதுரை மேலூரில் நடைபெற்ற கொடுமை பற்றி, 1952 மார்ச் மாத 'சண்டே டைம்ஸ்' இதழில் கட்டுரையாக எழுதி இருக்கிறார்.

டீக்கடைகளிலே 'இரட்டைக் குவளை' முறை இருந்ததையும், தாழ்த்தப்பட்ட சாதி வாலிபர் ஒருவர், ஆதிக்க சாதிக்காரர்களுக்கான குவளையை எடுத்து, அதிலே தேநீர் கொடு என்று கேட்டதற்காக, அவர் தாக்கப்பட்டதையும் கண்ட ஆனந்த தீர்த்தர், அந்தக் கொடுமையை எதிர்த்து மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குத் தொடுக்கிறார். அந்தக் கொடுமைக்கு விதிக்கப்பட்ட தண்டனை வெறும் பத்து ரூபாய் அபராதம்தான்.

இதனால் மனம் கொதித்துப்போன ஆனந்த தீர்த்தர், இரண்டு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த வாலிபர்களைத் தன்னோடு அழைத்துக் கொண்டு மற்றொரு கிராமத்துக்குச் சென்று, அங்கே தானே முன்னின்று தேநீர் கேட்கிறார். தர மறுத்ததோடு, அவர்களைத் தாக்குகிறார்கள் ஆதிக்க சாதியினர். அதன் பிறகு நடந்தவை அவரது சொற்களில்...

"தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாக்கப்பட்டது தெரிய வந்தால், தங்களுக்கு பாதிப்பு வரும் என்று கருதிய அந்த கிராமத்தினர், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தோழர்கள், தங்கள் ஊர் கோவிலிலிருந்து சில பொருட்களைத் திருடிவிட்டார்கள் என்றும், அந்தப் பொருட்களை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கக்கன் அவர்களின் தந்தையார் பூசாரி கக்கனும், இன்னொரு உறவினரான எட்டி கக்கனும் 'அந்தப் பொருட்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வாலிபர்கள்தான் திருடினார்கள்' என்று சொல்லி அவற்றை கிராமத் தலைவரிடம் கொடுக்க வேண்டும் என்றும் அந்தக் கிராமத்தினர் வற்புறுத்தினார்கள். அவ்வாறு அந்தப் பொய் வழக்குக்கு அவர்கள் இருவரும் துணை போகாவிட்டால், கக்கனுடைய தந்தைக்கே ஆபத்து வரும் என்ற நிலை இருந்தது".

ஆனந்த தீர்த்தரின் கட்டுரையில் இடம்பெற்றிருக்கும் மேற்கண்ட வரிகளை, அண்ணல் அம்பேத்கர் தனது நூல் ஒன்றில் பதிவு செய்துள்ளார். அது, 'டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கரின் எழுத்துகளும் பேச்சுகளும்' என்ற புத்தகத்தில், ஐந்தாவது தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. நேர்மைக்கும் எளிமைக்கும் பெயர் பெற்ற, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கக்கனின் தந்தைக்கே இந்த நிலை என்றால், சாமானியர்களின் நிலை பற்றிக் கேட்கவே வேண்டாம்.

### மனித உரிமைக் கருத்தரங்கு

1997 நவம்பர் 5 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில், 'மனித உரிமை' கருத்தரங்கைத் தொடங்கி வைத்து முத்தமிழறிஞர் கலைஞர் ஆற்றிய உரையில், "1947 ஆம் ஆண்டிலே நமக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டதென்றாலும் கூட, இன்னமும் மனித உரிமை முற்றிலுமாகக் கிடைக்கவில்லை. மனித சுதந்திரம் கிடைக்கவில்லை" என்று சொல்லி, ஆனந்த தீர்த்தரின் அனுபவத்தை உதாரணமாகக் காட்டினார். அதைச் சொல்லிவிட்டு, மனித உரிமை பாதுகாக்கப்படுவது தொடர்பான வரலாற்றையும் சொன்னார் கலைஞர்.

"1968 ஆம் ஆண்டு டெக்ரான் மாநகரத்தில் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமை மாநாடு தனது பிரகடனத்தில், 'மனித உரிமையையும், அடிப்படை உரிமைகளையும் பிரிக்க முடியாது. சமூக, பொருளாதார, கலாச்சார உரிமைகளை ஒருவர் அனுபவிக்காமல் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளை அடைய முடியாது' என்று வலியுறுத்தியுள்ளது. அதைத் தொடர்ந்துதான் பல நாடுகளிலே மனித உரிமை ஆணையங்கள் உருவாயின.

> தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்ட உடனே, முதற்கட்டமாக அந்த ஆணையம் வேலூர், சேலம், மதுரை, திண்டுக்கல், ஈரோடு ஆகிய ஐந்து மாவட்டங்களுக்குச் சென்று, அந்தப் பகுதிகளில் இருந்த மாற்றுத் திறனாளிகள் மற்றும் விளிம்பு நிலை மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியது. தவிர, பொதுமக்களிடமிருந்தும் புகார் மனுக்கள் பெறப்பட்டன. ஆணையம் அமைக்கப்பட்ட சில நாட்களிலேயே 726 மனுக்கள் பெறப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, நம்முடைய இந்தியாவில் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதியன்று, 'தேசிய மனித உரிமை ஆணையம்', நீதிபதி ரெங்கநாத் மிஸ்ரா அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்டது. அந்த ஆணையத்தின் உறுப்பினர்களிலே ஒருவராக இருந்தவர் நம்முடைய தமிழக ஆளுநராக இன்றைக்கு இருக்கின்ற செல்வி பாத்திமா பீவி அவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது" என்றார்.

### மதிக்கப்படாத கடிதம்

அந்த தேசிய மனித உரிமைகள் ஆணையத்திடமிருந்து மாநில அரசுகளுக்கு 1993 டிசம்பர் 14 ஆம் தேதி கடிதம் ஒன்று வந்தது. அதில், காவல் நிலையங்களில் நடைபெறும் மரணங்கள், பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட சம்பவங்கள் நடைபெற்றால், அதுதொடர்பான அறிக்கைகளை உடனடியாக தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

ஆனால் அப்படி அறிக்கைகள் அனுப்புவதற்கு முறையான நிர்வாகக் கட்டமைப்பு இல்லாமல் இருந்தது. அன்று, இந்தியாவில் 'மாநில மனித உரிமைகள் ஆணையம்' என்பவை ஏழெட்டு மாநிலங்களில்தான் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதைப் பற்றி கலைஞர் தன் உரையில் கூறும்போது, "தமிழ்நாட்டிலே 'மே' (MAY) என்ற அந்தச் சொல்லைப் பயன்படுத்தி அதை அமைக்காமலேயே இருந்துவிட்ட ஒரு சூழ்நிலை கடந்த ஆட்சியிலே இருந்தது" என்று சுட்டிக்காட்டினார்.

### கழக அரசின் கொள்கை

1996 ஆம் ஆண்டு மே 13 ஆம் தேதி தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றது. அடுத்து வந்த 23 ஆம் தேதி, அன்றைய ஆளுநர் டாக்டர் எம்.சென்னா ரெட்டி, கழக அரசின் மனித உரிமைக் கொள்கை குறித்து தனது உரையில் இப்படிக் குறிப்பிட்டார்:

"நமது மாநிலத்தில், குறிப்பாக புறநகர்ப் பகுதிகளில் சமூக விரோத ஆதிக்க சக்திகளால் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டு வன்முறைக் குற்றங்கள் பெருகி, மக்களுக்குக் காவல்துறை மீதிருந்த நம்பிக்கை தளர்ந்துள்ள சூழலை இந்த அரசு மிகுந்த கவலையுடன் கவனித்து 'வேலியே பயிரை மேயும்' வேதனையைத் தடுத்து நிறுத்தவும் குற்றங்கள் புரிய 'அரசியல்' என்பது ஒரு பாதுகாப்பான இடம் என்ற அவலநிலையை அறவே போக்கவும், காவல்துறை என்பது மக்களுக்கு நல்லுறவுத் துறையாகவும், பாரபட்சமற்ற நடுநிலைத் துறையாகவும் மாற்றப்பட நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்கப்படும். மனித உரிமைகள் மீறல் பற்றிய புகார்களை விசாரணை செய்ய 'மாநில மனித உரிமைகள் ஆணையம்' அமைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

அதன்படி, தமிழ்நாட்டில் இந்த ஆணையம் 1996 டிசம்பர் 20 அன்று அமைக்கப்பட்டது. தொடர்ந்து, 1997 ஏப்ரல் 17 அன்று, அந்த ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. 25 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த ஆணையம் மக்களின் உரிமைகளைக் காத்து வருகிறது. ஆம்... இறந்தும் மக்களைக் காக்கிறார் கலைஞர்..!

...வலம் வருவோம்

## இந்தோனேசிய இந்துயிசம்!

இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் நாடான இந்தோனேசியாவில் இந்துக்களும் சிறிய அளவில் இருக்கின்றனர். அவர்கள் கி.பி. 1-ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து குடிபெயர்ந்தவர்கள். சமீபத்தில் இந்தோனேசியாவுக்குப் பயணம் செய்திருந்த, கொலம்பியா பல்கலைக்கழகத்தின் சமூகவியல் கொள்கைத் துறைப் பேராசிரியர் நீரஜ் கவுசால், இந்தோனேசியாவில் வசிக்கும் இந்துக்களின் வாழ்க்கைச் சூழல், இறை நம்பிக்கை, இந்துயிசம் குறித்து, ஆங்கில நாளேடு ஒன்றில் எழுதியுள்ளார்.

"சாதியின் பெயரிலான தீண்டாமைக் கொடுமைகள் அங்கு கொஞ்சம் கூட இல்லை. தாழ்த்தப்பட்ட சமூகம் என்ற ஒன்றும் அங்கே இல்லை. பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் அங்குள்ள கோயில்களில் இறைப்பணி ஆற்றுகின்றனர். ஆகமத் தடையெல்லாம் அங்கே கிடையாது. எல்லா கோயில்களிலும் சாதி, மத, பாலின பேதமின்றி எல்லோரும் வழிபடலாம். எந்தக் காலத்திலும் ஏற்றத்தாழ்வுகள் இருந்ததற்கான சான்றுகளே அங்கு இல்லை. 75 சத விகிதத்துக்கும் அதிகமான திருமணங்களில், தங்களுக்கான இணையைத் தாங்களே தேர்வு செய்துகொள்கின்றனர்.

ஆணவப் படுகொலைகள் என்ற பேச்சுக்கே இடமில்லை. வேலை வாய்ப்புகளில் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு, இந்திய சராசரியே 24 சதவிகிதம்தான். ஆனால், இந்தோனேசிய இந்துப் பெண்களில் 50 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்புகளில் பங்களிப்பு செய்கின்றனர்" என்றெல்லாம் ஆச்சரியங்களை அடுக்கியிருக்கிறார் நீரஜ் கவுசால். இதையெல்லாம் உணர்வார்களா இந்திய இந்துத்துவ வாதிகள்..?

## :.ப்ளாஷ்பேக்



### பெற்றோருடன் புகைப்படம்!



எழிலரசி விஜயகுமார்

1983 ஜனவரி 20 ஆம் தேதி, என் தந்தை வழக்கறிஞராகப் பதிவு செய்து அங்கீகரிக்கப்பட்ட காரணத்தால், தலைவர் கலைஞர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற குடும்பத்தாருடன் கோபாலபுரம் அழைத்துச் சென்றார். தலைவர் கலைஞர்தான் எனக்குப் பெயர் சூட்டினார். அப்போது கலைஞர் அவர்கள் திருமணம் ஒன்றுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த நிலையில், அவசரமாக எடுக்கப்பட்ட புகைப்படம். எந்தச் சூழ்நிலையிலும் தொண்டர்களை அரவணைக்கும் தலைவரின் பாச வெளிப்பாடு. கைக்குழந்தையாக நான். என் தாயார் பிச்சையம்மாளும் உடனுள்ளார்.

**-எழிலரசி விஜயகுமார், அம்மாபேட்டை, சேலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவின் முதல் சிறைவாசம்

**1938 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் தேதி சென்னை ஆயிரம்விளக்கு பகுதியில் உள்ள கதீட்ரல் சாலையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் மக்களைத் தூண்டி விடும் வகையில் அண்ணா பேசினார் எனக் குற்றம்சாட்டப்பட்டு செப்டம்பர் 21-ஆம் தேதி கைது செய்யப்பட்டார். 4 மாத வெறுங்காவல் தண்டனை அண்ணாவுக்கு வழங்கப்பட்டது. அண்ணாவின் முதல் சிறைவாசம் இதுவே.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 361




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131